பக்கங்கள்:-22

காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | வைகாசி 17 | வியாழக்கிழமை | 30.05.2024 | அதிர்வு 303

## ஜனாதிபதித் தேர்தல் நிச்சயம் நடத்தப்படும்

### ரணில் திட்டவட்டம்



ஜனாதிபதித் தேர்தல் இவ்வருடம் நிச்சயமாக நடத்தப்படும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 06▶

தமிழ் மக்களை வாக்குச்சாவடிக்கு இழுத்துச் செல்லவே பொது வேட்பாளர் நாடகம்

# இந்தியாவினதும் ரணிலினதும் அடிவருடிதான் விக்னேஸ்வரன்

## போட்டுத் தாக்குகின்றார் கஜேந்திரன்

(எஸ்.நிதர்ஷன்)

இந்தியாவினதும் ரணில் விக்கிரமசிங்கவினதும் அடிவருடியே விக்னேஸ்வரன் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார். 06▶




# உரிய காலத்தில் தேர்தலை நடத்தும் வகையில் அரசமைப்பை மாற்றுங்கள்

## சித்தார்த்தன் எம்.பி. வலியுறுத்து



(எஸ்.நிதர்ஷன்)

அமெரிக்கா போல் இலங்கையிலும் உரிய காலத்தில் தேர்தலை நடத்தும் வகையில் அரசமைப்பு மாற்றப்பட வேண்டும் என்று புளொட் கட்சியின் தலைவரும் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்தார்.

அவரது வீட்டில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நாடாளுமன்றத் தேர்தலாக இருந்தால் என்ன, ஜனாதிபதித் தேர்தலாக இருந்தால் என்ன அந்தக் காலத்துக்குத் தேர்தல் நடத்தபட வேண்டும். தேர்தலைப் பிற்போட்டுத் தாம் விரும்பியபடி ஜனநாயகத்தை மறுக்கின்ற செயற்பாட்டைத் 06▶

# பிரதமர் பதவிக்கு ஆசைப்படுகின்ற சிலரால் சஜித் கட்சிக்குள் குழப்பம்

## முதுகெலும்புள்ள தலைமைத்துவம் அவசியம்; பீல்ட் மார்ஷல் பொன்சேகா எம்.பி. வலியுறுத்து



"ஐக்கிய மக்கள் சக்திக்குள் பிரதமர் பதவிக்கு ஆசைப்படும் சிலரே கட்சிக்குள் குழப்பத்தை ஏற்படுத்தி புறமுதுகில் குத்தப் பார்க்கின்றனர். எமது கட்சிக்குள் முதுகெலும்புள்ள தலைமைத்துவம் அவசியம்."

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் தவிசாளர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார். 06▶




இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வழக்குத் தவணை திருகோணமலை மாவட்ட நீதிமன்றத்தில் நாளை.

கட்சியின் மத்திய குழு கூடி, வழக்கை எப்படிக் கையாள்வது என்று ஒருதீர்மானத்தை எடுத்த பின்னர் வரப்போகும் முதல் வழக்குத் தவணை இது.

எனினும் மத்திய குழுக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டபடி வழக்காளியுடன் விவகாரத்தை இணக்கமாகவே தீர்க்கும் முடிவை செயல்படுத்துவது இன்னும் பூர்வாங்க – ஆரம்ப – கட்டத்தில்தான் இருக்கின்றது.

இதற்கும் காரணம் உண்டு. 06▶

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம் - Bonding Tamils Globally



# காங்கேசன் துறைமுக அபிவிருத்திக்கென இந்து மயானத்தையும் சேர்த்து கபளீகரம்!

(ந.லோகதயாளன்)

காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்திக்காக கையகப் படுத்தும் நிலத்தில் இந்து மயானமும் சேர்ந்து அபகரிக்கப்படுவதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்திக்காக சீமேந்து ஆலையின் 33 ஏக்கர் நிலமத்தை வழங்க அமைச்சரவை அனுமதி பெறப்பட்டது. இருந்தபோதும் சீமேந்து ஆலையில் இருந்து 33 ஏக்கர் நிலத்தை பெறுவதில் காணப்பட்ட நெருக்கடியின் காரணமாக சீமேந்து ஆலைக்குச் சொந்தமான நிலங்களை அடையாளப்படுத்துமாறு பிரதேச செயலகத்திடம் கோரப்பட்டது. இதன்போது சீமேந்து ஆலைக்குரியது என 23 ஏக்கர் நிலத்தை பிரதேச செயலாளர் அடையாளப்படுத்தியுள்ளார்.

பிரதேச செயலாளர் அடையாளப்படுத்திய 23 ஏக்கர் நிலப்பரப்பிற்குள்ளேயே காங்கேசன்துறை பிரதேச சபையின் ஆளுகையில் ஜே/233 கிராம சேவகர் பிரிவில் இருந்த ஐயங்காடு இந்து மயானமும் முழுமையாக உள்வாங்கப்பட்டு விட்டமை தற்போது கண்டறியப்பட்டுள்ளது. இதன் காரணமாக மயானத்திற்கு உரித்தான ஒரு ஏக்கர், ஒரு றூட், 28 பேச் அளவைக்கொண்ட மயானம் முழுமையாக துறைமுக அதிகார சபையினால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது.

காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்திக்காக வழங்கப்படும் நிலத்தின் வரைபடத்தில் அப்பகுதியில் ஓர் சுடுகாடு இருப்பது தெளிவாக காண்பிக்கப்பட்டுள்ள போதும் துறைமுக அதிகார சபையும் அதனைக் கண்டுகொள்ளவில்லை.

தற்போது துறைமுகங்கள் அதிகார சபையினர் தமக்கு வழங்கப்பட்ட 23 ஏக்கர் நிலத்தை சுற்றிச் சுற்று மதில் அமைக்கின்றனர். இதன்போது இந்த சுடுகாட்டையும் தமது பிரதேசத்திற்குள் உள்வாங்கி மதில் அமைக்கப்படுவதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

# வங்கிப் பாதுகாப்பு பெட்டகத்தை துளையிட்டு 4 கோடி ரூபா நகைகளைத் திருடியவர் கைது

ஜா-எலயில் கூட்டுறவு கிராமிய வங்கியொன்றுக்குள் நுழைந்து 2 நாள்கள் அங்கேயே தங்கியிருந்து, பாதுகாப்பு பெட்டகத்தை துளையிட்டு பணம் மற்றும் தங்க நகைகளைத் திருடிய நபரை பேலியகொடை குற்றத்தடுப்புப் பிரிவு கைது செய்துள்ளது.

அந்த நபர் வங்கியின் சுவரை இடித்து பாதுகாப்பு பெட்டகத்தை துளையிடும் ஆயுதத்தால், இந்த குற்றச் செயலை செய்துள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பாதுகாப்பு பெட்டகத்தில் சுமார் 4 கோடி ரூபா பெறுமதியானதங்கநகைகளையும்10லட்சம்ரூபாவுக்கும்மேற்பட்டபணத்தையும் திருடியுள்ளமையுடன், வங்கியிலிருந்த சி.சி.ரி.வி. கமரா கட்டமைப்பை முழுமையாகக் கழற்றி எடுத்துச்சென்றுள்ளார்.

எவ்வாறாயினும், பாதுகாப்பு பெட்டகத்தை துளையிடுவதற்காக பயன்படுத்தப்பட்டதென சந்தேகிக்கப்படும் பொருளை வங்கியிலிருந்து கண்டெடுத்த பொலிஸார், அதனூடாக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

பின்னர் பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பிரகாரம், ராகமையிலுள்ள வர்த்தக நிலையமொன்றின் சி.சி.ரி.வி. கெராவை பரிசோதித்த போது, ஒருவர் காரொன்றில் மூன்று தடவைகள் சென்று கிரைன்டருக்கு பயன்படுத்தப்படும் பிளேட், கையுறை, சிறிய சுத்தியல் உள்ளிட்ட ஆயுதங்களைக் கொள்வனவு செய்கின்றமை கண்காணிக்கப்பட்டுள்ளது.

அதற்கு அமைவாக நடத்தப்பட்ட விசாரணைகளில் சந்தேகநபர் கொழும்பை அண்மித்துள்ள இரவு களியாட்ட விடுதிகளுக்கு அடிக்கடி செல்பவர் என்பது தெரியவந்துள்ளது.

அதனை அடிப்படையாக வைத்து கொள்ளுப்பிட்டியிலுள்ள பிரபல களியாட்ட விடுதியொன்றிலிருந்து சந்தேகநபர் வெளியில் வரும் போது அவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கெஸ்பாவ - மடபாத, கஹபொல பகுதியை சேர்ந்த 34 வயதுடைய ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.



வங்கியிலிருந்து திருடிய தங்க ஆபரணங்களில் ஒரு பகுதியை சந்தேகநபர் தற்காலிகமாக தங்கியிருந்த ராகம ஹொரபேயிலுள்ள அறையில் பதுக்கி வைத்திருந்த நிலையில், பொலிஸார் கண்டுபிடித்தனர்.

அத்துடன், கிராமிய வங்கியின் பாதுகாப்பு பெட்டகத்தை துளையிடுவதற்கு பயன்படுத்தப்பட்ட கிரைன்டர் உள்ளிட்ட ஆயுதங்களும் சம்பவ தினத்தன்று அவர் அணிந்திருந்த ஆடைகளும் அந்த அறையிலிருந்தே கண்டெடுக்கப்பட்டன.

மேலும் திருடிய தங்க ஆபரணங்களில் ஒரு பகுதியை கொழும்பு செட்டியார் தெருவிலுள்ள நகைக்கடைகள் சிலவற்றில் விற்று பெற்றுக்கொண்ட 24 லட்சம் ரூபாவை கெசினோ விளையாட்டுக்கு செலவிட்டார் எனவும் பொலிஸாரிடம் ஒப்புதல் வாக்குமூலம் அளித்துள்ளார்.

இதேவேளை, 2023 ஆம் ஆண்டு வென்னப்புவ மனம்பிட்டிய கூட்டுறவு கிராமிய வங்கியின் ஜன்னல்களை கிரில்களால் துளையிட்டு உள்ளே நுழைந்து இதேபோன்று திருடியதாகவும் அந்தப் பணத்தில் தாம் தற்போது பயன்படுத்தும் காரை வாங்கியதாகவும் பொலிஸாரிடம் சந்தேகநபர் தெரிவித்துள்ளார்.

இதனை தவிர 2022 ஆம் ஆண்டு முதல் இதுவரை ஜா-எல, வெலிசறை, ராகம, மஹபாகே, கடவத்தை ஆகிய பகுதிகளில் தபால் நிலையம், சதொச மற்றும் உணவு விற்பனை நிலையங்களில் பாதுகாப்பு பெட்டகங்களை துளையிட்டு பணம் திருடிய சந்தேகநபர் இவர் தான் என்பதும் உறுதி செய்யப்பட்டுள்ளது.



# ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் எந்த வேட்பாளருமே நிறைவேற்றிகாரத்தை இரத்துச் செய்வர் எனக் கூறவில்லை

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

"ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட முன்வந்திருக்கும் எந்தவொரு வேட்பாளரும் நிறைவேற்று அதிகாரத்தை இரத்துச் செய்வர் எனக் கூறவில்லை. நிறைவேற்று ஜனாதிபதி முறைமை சாதக, பாதக அம்சங்களுடன் கூடியதாகவே காணப்படுகின்றது."

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இளம் சட்டத்தரணிகளுடன் நடைபெற்ற What's New சட்ட மறுசீரமைப்பு தொடர்பில் நேற்று முன்தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற செயலமர்வில் கலந்துகொண்டிருந்த போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

" இலங்கையில் பல ஆட்சி முறைகள் இருந்தன. ஒன்று ஆங்கிலேயர் கால முறைமை. அதன்படியே அமைச்சரவை செயற்படுகிறது. மற்றையது நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை. நிறைவேற்று அதிகாரம் ஜனாதிபதியிடம் உள்ளது. சட்டமியற்றும் அதிகாரங்கள் சட்டவாக்க சபையிடம் உள்ளது. அதன்படி ஜனாதிபதி ஒரு கட்சியிலிருந்து தெரிவாகும் போது, சட்டவாக்க சபைக்கு மற்றொரு கட்சியிலிருந்து உறுப்பினர்கள் தெரிவாகலாம்.

சுவிட்சர்லாந்தின் நாடாளுமன்ற முறையில், நாடாளுமன்றத்தால் சமஷ்டி செயற்குழுவினால் ஏழு பேர் நியமிக்கப்படுவர். நிறைவேற்று அதிகாரம் சமஷ்டி சபையிடம் காணப்படும்.

அந்நாட்டு முறைமைக்கமைய இரண்டு பிரதான கட்சிகளுக்கும் தலா இரண்டு ஆசனங்கள் வழங்கப்படும். ஏனைய கட்சிகளுக்கு ஒரு ஆசனம் என்ற அடிப்படையில் ஒதுக்கப்படும். அவ்வாறு நியமிக்கப்பட்டும் உறுப்பினர்கள் நிறுவனங்களைப் பகிர்ந்து கொள்வது தொடர்பில் கலந்தாலோசிக்க முடியும். அவர்கள் அனைவரும் ஒன்றுபட்டே நிறைவேற்று அதிகாரத்தையும் செயற்படுத்துவர். அமைச்சரவைக்கு அமைச்சர்களை நியமிக்கவும் நீக்கவும் பிரதமருக்கு அதிகாரம் உள்ளது. ஆண்டுக்கு ஒருமுறை, அந்த ஏழு பேரில் ஒருவர் தலைமைப் பொறுப்பை ஏற்பர்.

மற்றைய முறை இலங்கையில் இருந்த டொனமோர் முறை. அந்த அமைப்பில், நிர்வாக அமைப்பு ஏழு பகுதிகளாக பிரிக்கப்பட்டது. அவர்களில் ஒருவர் சபாநாயகராக செயல்பட்டார். அந்த ஏழு பேரில் ஒருவர் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். தலைவர் அமைச்சராக பதவியேற்றார். அந்த அமைச்சர்களில்



ஒருவர் சபைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். மேலும் மூன்று செயலாளர்களை ஆளுநர் நியமித்தார். அமைச்சர்கள் குழு, பத்து பேரைக் கொண்டது. இந்த பத்து பேரில் தலைமைச் செயலாளர் தலைவராக செயல்பட்டார். இந்த நிர்வாகக்குழுக் கூட்டத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அதன் பிறகு பிரான்ஸ் முறைமை வந்தது. அதன் கீழ் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி மக்கள் வாக்குகள் மூலம் தெரிவு செய்யப்பட்டார். நாடாளுமன்ற உறுப்பினர்கள் மக்களால் தெரிவு செய்யப்பட்டனர். இந்த முறையே இலங்கையில் அதிகம் பயன்படுத்தப்படுகிறது. இதில் சாதக பாதகங்கள் இரண்டுமே உள்ளன. மறைந்த முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்தன நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி பதவியை வகித்து நாட்டுக்கு பெரும் பணி ஆற்றியுள்ளார். மகாவலி, சமனல குளம், லுணுகம்வெஹர போன்ற பாரிய திட்டங்கள் நிர்மாணிக்கப்பட்டன. கோட்டே தலைநகராக மாற்றப்பட்டது. இரண்டு வர்த்தக வலயங்கள் நிறுவப்பட்டன. இந்த அபிவிருத்தித் திட்டங்கள் அனைத்தும் 11 வருட யுத்தத்திற்கு மத்தியில் செயற்படுத்தப்பட்டவையாகும்.

அத்துடன், மறைந்த முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸ, சுமார் 26 ஆடைத் தொழிற்சாலைகளை ஆரம்பித்தார். நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை இல்லாவிட்டால் இலங்கைக்கு யுத்தத்தில் வெற்றி கிடைத்திருக்காது. இலங்கையில் நெருக்கடி ஏற்பட்டு ஆட்சி கவிழும் என வெளிநாடுகள் எதிர்பார்த்தன. ஜனாதிபதியொருவர் இருந்ததால் அந்த அதிகாரத்தை யாராலும் பறிக்க முடியவில்லை. முன்னாள் ஜனாதிபதி

04





# ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் எந்த வேட்பாளருமே நிறைவேற்றதிகாரத்தை இரத்துச் செய்வர் எனக் கூறவில்லை

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

(3ஆம் பக்கத் தொடர்ச்சி...)

மஹிந்த ராஜபக்ஷவுக்கு அந்த அதிகாரம் இருந்ததாலேயே அவரால் இராணுவத்தை நிலைநிறுத்தி யுத்தத்தில் வெற்றி பெற முடிந்தது.

நல்லாட்சி அரசாங்கத்தின் போது அது முறையாக பயன் படுத்தப்படவில்லை. நிறைவேற்றதிகார ஜனாதிபதி தனியாக வும், நாங்கள் தனியாகவும் செயற்பட வேண்டிய நிலைமை உருவானது. போராட்டத்தின் போது நிறைவேற்று அதிகாரம் இருந்ததாலேயே நாட்டில் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்த முடிந்தது. அன்று பிரதமர் பதவியை ஏற்க யாரும் முன்வர வில்லை. அப்போது ஜனாதிபதி கப்பலில் ஏறி திருகோண மலை சென்ற போது சிலர் என்னைப் பிரதமர் பதவியில் இருந்து விலகச் சொன்னார்கள்.

அதன்போது, பெரும்பான்மை உள்ள ஒருவர் நாடாளுமன் றத்தில் இருக்க வேண்டும் என்றும், இல்லாவிட்டால் நான் பதவி விலக முடியாது என்றும் கூறினேன். பதவி விலகுவதற் கான கடிதத்தை எழுதினாலும் அதனை ஜனாதிபதியிடமே கையளிக்க வேண்டும். ஜனாதிபதி கப்பலில் தஞ்சம் புகுந்தி ருந்து காரணத்தினாலும், நாட்டை விட்டு மாலைத்தீவுக்கு சென்றதாலும் என்னால் அந்த கடிதத்தை வழங்க முடியாது. அழுத்தங்கள் மற்றும் எனது வீட்டிற்கு தீ வைக்கப்பட்ட காரணத் தினால் நான் பதவி விலகியிருந்தால் ஜனநாயகத் திற்கு முரணாகவே எவரேனும் நாட்டை கைபற்றியிருப்பார் கள்.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதாகவும் அதில் வென்று ஜனாதிபதியாகப் போவதாகவும் சொல்லும் எந்நவொரு வேட்பாளரும் நிறைவேற்று அதிகாரத்தை நீக் குவதாக இதுவரை அறிவிக்கவில்லை. அதனால் நாடாளு மன்றத்தை பலப்படுத்தும் வேலைத்திட்டத்தை தயாரிக்க



வேண்டியது அவசியம்.

இப்போதும் மாகாண சபைக்கு நிறைவேற்று அதிகாரங்கள் சில வழங்கப்பட்டுள்ளன. மற்றொரு பகுதி நாடாளுமன்ற துறைசார் மேற்பார்வை குழுக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. இன்னும் சில சட்டங்கள் கொண்டுவரப்பட்ட பின்னர் அந்த அதிகாரம் நாடாளுமன்றத்திற்கு பிரிந்துச் செல்லும்

ஜனாதிபதி நாடாளுமன்றத்திற்கு பொறுப்புக்கூறும் வகை யில் சட்டங்களை நிறைவேற்ற வேண்டியது அவசியமா கும். புதிதாக கொண்டு வரப்பட்டுள்ள பொருளாதார மாற்ற சட்டத்தின் ஊடாக அடுத்த 04 வருடங்களுக்கான அரசாங் கத்தின் திட்டம் முன்வைக்கப்பட வேண்டும். ஒவ்வொரு வரு டமும் நடைமுறைப்படுத்தப்படும் வேலைத்திட்டங்கள் தொடர்பான முன்னேற்றங்கள் வருட இறுதியில் நாடாளுமன் றத்திற்கு அறிவிக்கப்பட வேண்டும். முன்னாள் சபாநா யகர் கரு ஜயசூரியவினால் முன்மொழியப்பட்ட மக்கள் சபை முறைமை சாத்தியமான ஒன்றாகும். அதேபோல் நாடாளுமன்றத்திற்கு கொண்டுவரப்படவிருக்கும் பாலின சமத்துவச் சட்டமும் நடைமுறைக்கேற்றது என்பதைக் கூற வேண்டும்."– என்றார்.











# 2 பிள்ளைகளை சித்திரவதை செய்த தாய் மட்டக்களப்பு ஏறாவூரில் கைது

## தலைகீழாக கட்டித் தொங்க விட்டுத் தாக்கினாராம்

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு ஏறாவூர் பொலிஸ் பிரிவிலுள்ள பிரதேசம் ஒன்றில் 11 வயதுச் சிறுவன் ஒருவனைத் தலைகீழாகக் கட்டித் தொங்கவிட்டுக் கம்பால் அடித்துச் சித்திவதை செய்தமையுடன் இரண்டரை வயது ஆண் குழந்தையையும் அடித்துத் துன்புறுத்தினார் எனக் கூறப்படும் 28 வயதுடைய தாய் ஒருவரை நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு தாங்கள் கைது செய்துள்ளனர் எனவும் பாதிக்கப்பட்ட இரு சிறுவர்களையும் வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதுபற்றி தெரியவருவதாவது:-

தமிழ்ப் பெண்ணான இந்தத் தாயார் திருமணம் முடித்த பின்னர் கணவரை விட்டுவிட்டுப் பிரிந்து, அவருக்குப் பிறந்த குழந்தையுடன் முஸ்லிம் மதத்திற்கு மதம்மாறி, முஸ்லிம் நபர் ஒருவரை திருமணம் முடித்துள்ளார்.

அதன் பின்னர் அந்த முஸ்லிம் நபரையும் விட்டுவிட்டு புத்தளம் பகுதியிலுள்ள சிங்களவர் ஒருவரைத் திருமணம் முடித்திருக்கின்றார். அவருக்கு இரண்டரை வயதில் ஆண் குழந்தை இருக்கும் நிலையில் அவரை விட்டுவிட்டு இரு குழந்தைகளுடன் மீண்டும் ஏறாவூர் சதாம் உசைன் கிராமத்தில் வந்து தங்கி வாழ்ந்து கொண்டுவருகின்றார்.

இந்த நிலையில் கடந்த ஏப்பிரல் மாதம் தனது 11 வயதுடைய மூத்த பிள்ளை புகைத்தலில் ஈடுபட்டார் என அந்தச் சிறுவனை பிடித்து மரம் ஒன்றில் தலைகீழாகக் கட்டித் தொங்க விட்டுக் கம்பால் தாக்கிச் சித்திரவதை செய்துள்ளார் எனக் கூறப்படுகின்றது.




அதேவேளை இரண்டாவது இரண்டரை வயது மகனையும் அடித்துத் துன்புறுத்தி வருவதாக அந்த பிள்ளையின் தகப்பனான புத்தளத்தைச் சேர்ந்த சிங்களவருக்குத் தெரிய வந்ததையடுத்து, அவர் உடனடியாக ஏறாவூருக்குச் சென்று தாயாரிடம் தனது மகனைத் தருமாறு கேட்ட நிலையில் சிறுவனைத் தரமுடியாது என அவர் மறுத்துள்ளார்.

இதனையடுத்துத் தந்தையார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருக்கின்றார். நேற்று முன்தினம் இரவு பொலிஸார் தாயாரின் கையடக்கத் தொலைபேசியை பரிசோதித்த போது இரு சிறுவர்களையும் துன்புறுத்தும் போது எடுக்கப்பட்ட வீடியோக்களை கண்டுபிடித்திருக்கின்றனர். இதனை அடுத்து அவரைக் கைது செய்தமையுடன் இரு குழந்தைகளையும் மீட்டு வைத்தியசாலையில் தாங்கள் ஒப்படைத்துள்ளனர் எனப் பொலிஸார் ஆரம்ப கட்டவிசாரணையின் பின்னர் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித் தனர்

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஏறாவூர் பொலிசஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இணக்கத் தீர்வு முயற்சியாக வழக்காளி தரப்பு சட்டத்தரணியான ஜெவ்றி அழகரட்ணத்துடன் எதிராளிகள் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் முதல் ஒரு சுற்றுப் பேச்சு நடத்திவிட்டார் எனத் தெரிகிறது.

இந்த வழக்கில் எதிராளிகள் அனைவரும் தத்தமது தரப்புச் சமர்ப்பணங்களை எழுத்தில் நீதிமன்றில் முன் வைத்து விட்டனர். அவை தொடர்பில் வழக்காளி தரப்பின் பிரதிபலிப்பை அறியவே இன்றைய வழக்குத் தவணை அழைக்கப்பட்டுள்ளது.

கட்சியின் மத்திய குழுவின் இணக்கத் தீர்மானம் ஒன்று எட்டப்படுவதற்கு முன்னர் எதிராளிகள் தத்தம் பாட்டில் சமர்ப்பித்த சமர்ப்பணங்கள் இவை.

எதிராளிகள் ஏழு பேரும் வித்தியாசமான நிலைப்பாடுகளை எடுத்து சமர்ப்பணங்களை முன் வைத்திருக்கின்றனர் என்ற தமது அவதானிப்பை நாளைய தவணையின் போது வழக்காளி தரப்பு சட்டத்தரணி ஜெவ்றி அழகரட்ணம் வைக்கக்கூடும்.

அப்போது எதிராளிகள் தரப்புச் சட்டத்தரணிகள் குறுக்கிட்டு, தங்களின் புதிய நிலைப்பாட்டை - கட்சியின் மத்திய குழுவில் ஒன்றுபட்டு எடுத்த தீர்மானத்தை - தங்கள் புதிய சமர்ப்பணங்களாக நாளைய தவணையின் போது வாய் மூலமாக முன் வைக்கும் சாத்தியம் உண்டு. அதன் அடிப்படையில் வழக்கை விரைவாகவும் சுமூகமாகவும் தீர்த்து முடிவுக்குக் கொண்டு வர தாங்கள் விரும்புகின்றனர் என்ற நிலைப்பாட்டையும் அவர்கள் நீதிமன்றத்திற்குப் பெரும்பாலும் தெரிவிப்பர்.

அதை செவி மடுத்ததும் வழக்கை நீதிமன்றம் உடனடியாக சுமுகமாக விடயத்தைத் தீர்த்து விட முடியாது. அதற்குப் பின்னரும் சில ஒழுங்கு முறை ஏற்பாடுகள் உண்டு.

இத்தகைய இணக்கத்தோடு சுமுகமாகத் தீர்க்கப்படும் வழக்குத் தொடர்பில் இரண்டு அல்லது பல்வேறு தரப்புக்களின் இணக்க ஏற்பாடுகள் அடங்கிய ஆவணத்தை, சம்பந்தப்பட்ட தரப்புகளின் சட்டத்தரணிகள் குடியியல் நடைமுறைச் சட்டகோவையின் 72 ஆம் பிரிவுக்கு அமைய, இணக்க ஏற்பாட்டுப் பத்திரமாகத் தயாரித்து நீதிமன்றத்திற்குச் சமர்ப்பிக்க வேண்டும்.

எல்லா விடயங்களும் சுமூகமாக - இணக்கமாக - நாளைய வழக்குத் தவணையில் நகருமானால், அத்தகைய 72ஆம் பிரிவின் கீழான ஆவணத்தை வழக்காளி மற்றும் எதிராளிகள் தரப்புகளின் சட்டத்தரணிகள் ஒன்றுபட்டு செயற்பட்டு இணக்கமாகத் தயாரித்து கொண்டு வாருங்கள் என்று குறிப்பிட்டு ஒரு திகதிக்கு வழக்கை நாளை நீதிமன்றம் ஒத்தி வைக்கக் கூடும்.

அப்படி நடந்தால் அடுத்த தவணையிலோ அல்லது அதற்க அடுத்தடுத்த தவணைகளிலோ வழக்கை சுமுகமாக முடிவுக்குக் கொண்டு வரலாம் என சட்டவட்டாரங்கள் நம்புகின்றன.

மூல வழக்கு தீர்ந்தாலும், அதை ஒட்டிய நீதிமன்ற அவமதிப்பு வழக்குத் தொங்கிக் கொண்டு தொடரும். நீடிக்கும். விடயத்தில் சம்பந்தப்பட்ட இலத்திரனியல் பத்திரிகையின் வெளியீட்டாளருக்கு நீதிமன்ற பிடியாணை உள்ள நிலையில் அவர் இப்போது வெளிநாட்டில். நாளை வழக்குத் தவணைக்கு அவர் நேரில் பிரசன்னமாகாவிட்டால், நாட்டுக்குள் வந்து அவர் இறங்கும் போது, அவரைக் கைது செய்து நீதிமன்றத்தில் முன்னிறுத்துவதற்கான கட்டளையை நாளை சில சமயங்களில் நீதிமன்றம் விமான நிலைய அதிகாரிகளுக்கு வழங்குவதற்கும் வாய்ப்புகள் - சாத்தியங்கள் - உள்ளன என்று தோன்றுகின்றது.

## இந்தியாவினதும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

விரக்தியடைந்துள்ள தமிழ் மக்களை வாக்குச்சாவடிக்கு இழுத்துச் செல்லவே தமிழ்ப் பொது வேட்பாளர் நாடகம் அரங்கேற்றப்படுகின்றது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

தேர்தல்கள் உரிய நேரத்தில் நடத்தப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

யாழ். கொக்குவிலில் அமைந்துள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் அலுவலகத்தில் நேற்று நடத்திய ஊடகச் சந்திப்பின்போதே கஜேந்திரன் எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"கடந்த காலத்தில் ஒற்றையாட்சிக்குள் 13ஆவது திருத்தச் சட்டத்தை ஏற்றுக்கொள்வதற்குத் தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் விக்னேஸ்வரன் முன்வந்து இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்குக் கையொப்பமிட்டுக் கடிதம் அனுப்பினார். 2016 ஆம் ஆண்டு மைத்திரி - ரணில் கூட்டமைப்பு தயாரித்த ஒற்றையாட்சி வரைபையும் அவர் ஏற்றுக்கொண்டிருக்கின்றார்.

இவ்வாறாக விக்னேஸ்வரனுக்கும் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் எந்தவித இடைவெளியும் இருப்பதற்கான வாய்ப்பு இல்லை. இந்தியாவின் முகவராக இருக்கக்கூடிய ரணில்

விக்கிரமசிங்கவைப் பலப்படுத்துகின்ற செயற்பாட்டிலேயே விக்னேஸ்வரன் தொடர்ந்து செயற்படுகின்றார்.

இன்று இந்திய மேற்குலக நாடுகளுக்கு ரணில் விக்கிரமசிங்கவை வெற்றி பெற வைக்க வேண்டும் என்ற சூழல் இருக்கின்றது. தமிழ் இனம் சார்ந்த கட்டமைக்கப்பட்ட இன அழிப்பை மேற்கொண்டுள்ள ரணில் விக்கிரமசிங்க வடக்குக்கு வருகை தருகின்றபோது அவருக்குச் செங்கம்பளம் விரித்து இவர்கள் வரவேற்பது கண்டிக்கத்தக்கது.

விக்னேஸ்வரன், நாடாளுமன்றத் தேர்தல் மற்றும் ஜனாதிபதித் தேர்தலைப் பிற்போடுவதை வரவேற்றிருக்கின்றார். ஆனால், குறித்த தேர்தல்கள் உரிய காலத்தில் நடத்தப்பட வேண்டும் என்பதே தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நிலைப்பாடாகக் காணப்படுகின்றது. தேர்தல் பிற்போடப்படுவது ஜனநாயகப் படுகொலையையே நிகழ்த்தும்.

தமிழ் மக்கள் பேரவையில் பல தேசிய கருத்தியல்களை உள்ளடக்கி உள்ளே நுழைந்தவரே விக்னேஸ்வரன். ஆனால், இந்திய நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் அவர் செயற்பட்டார். உலகில் எங்கும் இல்லாத வகையில் ஒரு நீதியரசர் தமிழ் மக்கள் கூட்டணி என்ற கட்சியை உருவாக்கி அதன் பின்னர் கொள்கை பற்றிப் பேசலாம் எனத் தெரிவித்தார்.

இது ஒரு உலக அதிசயம். இந்தியா காலால் இடுகின்ற கட்டளையைத் தலையால் நிறைவேற்றுகின்றவர்தான் விக்னேஸ்வரன். ஆகவே, இந்தியாவைப் பிடிகொடுக்கக்கூடாது என்பதற்காக அவர் பொது வேட்பாளர் விடயத்தில் இந்தியா இல்லை எனக் கூறுகின்றார்.

தமிழ் மக்கள் வாக்குச்சாவடிகளுக்குச் செல்லும் மனநிலையில் இன்று இல்லை. ஆகவே, தமிழ் மக்கள் வாக்குச்சாவடிகளுக்குச் சென்று வாக்களிக்கும் மனநிலையை உருவாக்கவே இந்தப் பொது வேட்பாளர் நாடகம் அரங்கேறியுள்ளது.

இன்று கூட்டமைப்பினர் சொல்லும் சிங்கள வேட்பாளருக்கு வாக்களிக்கும் நிலையில் தமிழ் மக்கள் இல்லை. இவ்வாறு மக்கள் வெறுப்படைந்த நிலையில் அரசுக்கு எதிராகச் செயற்படுவதாகக் கூறியே விக்னேஸ்வரன் போன்றோர் செயற்படுகின்றனர்.

அவ்வாறு பொது வேட்பாளர் யாரும் நிறுத்தப்பட்டால் கூட அவர் 72 மணித்தியாலங்களுக்கு முதல் சொல்லக்கூடும், "எமதுகோரிக்கைகளைசிங்களவேட்பாளர்களில் ஒருவர் ஏற்றுக்கொண்டுள்ளார். அவருக்கு வாக்களியுங்கள்" - என்று கூறி விலக கூடும். இல்லையெனில் இரண்டாவது விருப்பு வாக்கை சிங்கள வேட்பாளருக்கு வழங்குமாறு அவர் கூறுவார்.

இதன் காரணமாக எதிர்நிலையில் இருக்கக்கூடிய மக்களின் மனநிலையை வாக்குச்சாவடிக்குக் கொண்டு செல்லவே இந்த நாடகம் ஆடப்படுகின்றது." - என்றார்.

## ஜனாதிபதித் தேர்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தெரிவித்தார்.

அதற்கான நிதி ஒதுக்கீடுகள் ஏற்கனவே ஒதுக்கப்பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று முன்தினம் இளம் சட்டத்தரணிகளுடன் நடத்திய சந்திப்பின்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

## பிரதமர் பதவிக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

"கட்சிக்குள் உள்ள சிலர் பிரதமர் பதவி குறித்து கனவு காண்கின்றனர். மேலும் சிலர் தேசியப் பட்டியலுக்காகப் போராடுகின்றனர். அமைச்சுப் பதவிகளை எதிர்பார்த்துள்ள சிலரும் இருக்கின்றனர். இவ்வாறு கனவு காண்பவர்கள்தான் கட்சிக்குள் குழப்பத்தை ஏற்படுத்துகின்றனர்.

இதனைச் சீர்செய்யாவிட்டால் கட்சியாக முன்னோக்கிப் பயணிக்க முடியாது. அது கட்சிக்கே பெரும் பின்னடைவாக அமையும். மக்களுக்குப் பரிசுப் பொருட்களை வழங்கி நாட்டை மீட்க முடியாது. முதுகெலும்புள்ள தலைமைத்துவம் அவசியம். விவாதித்துக்கொண்டு இருப்பதில் பயன் இல்லை. செயலில்தான் காட்ட வேண்டும்." - என்றார்.

## உரிய காலத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தொடர்ந்து வந்த அரசுகள் மேற்கொண்டு வருகின்றன.

அமெரிக்காவின் அரசமைப்பு போல இலங்கையிலும் தேர்தலைப் பிற்போடாமல் உரிய காலத்தில் அதை நடத்தும் அரசமைப்பு இங்கும் உருவாக்கப்பட வேண்டும். அப்போது இங்கே ஜனநாயகம் சிறக்கும் .

தமிழ்ப் பொது வேட்பாளர் விடயத்தில் அது இன்றைய காலகட்டத்தின் தேவை என உணர்ந்து தமிழ்த் தரப்புக்கள் அனைத்தும் இயன்றவரை இணைய வேண்டும்." - என்றார்.



# இலங்கைக்கான அமெரிக்க தூதுவருடன் தேர்தல் ஆணைக்குழு தலைவர் சந்திப்பு

இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங், தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவரை சந்தித்துள்ளார்.

நாட்டில் நடத்தப்படவுள்ள தேர்தல்கள் தொடர்பில் வினவுவதற்காக இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

தேர்தலை நடத்துவது தொடர்பில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமை தொடர்பில் இதன்போது அமெரிக்க தூதுவர், தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவரிடம் வினவியுள்ளார்.

அரசியலமைப்பினூடாக தனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கு அமைய எதிர்வரும் தேர்தல்கள் நடத்தப்படும் என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.



இதேவேளை, ஐரோப்பிய ஆணைக்குழுவின் தூதுவர்கள், ஐக்கிய இராச்சிய உயர்ஸ்தானிகர்கள் உள்ளிட்ட பலரும் தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர்களை சந்தித்து எதிர்வரும் தேர்தல்கள் தொடர்பில் கடந்த சில நாள்களாக கலந்து ரையாடியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.



# நக்கில்ஸ் வனப்பகுதிக்குள் அத்துமீறி நுழைந்தால் கடும் நடவடிக்கை என வனவள அதிகாரி அறிவிப்பு

நக்கில்ஸ் வனப்பகுதிக்குள் அத்துமீறி நுழையும் நபர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுமென வனவள பாதுகாப்பு திணைக்களம் தெரிவித்துள்ளது.

சமூக ஊடகங்கள் ஊடாக பல்வேறு நபர்கள் வனப்பகுதியில் சுற்றுலாக்களை ஒழுங்கு செய்து வருகின்றனர் என வனப்பாதுகாப்பு ஆணையாளர் நாயகம் நிஷாந்த எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

பயணிகளுக்கான பாதையை தவிர்த்து மாற்று பகுதிகளில் சிலர் பயணிப்பதால், அவர்களின் பாதுகாப்பிற்கு பாரிய அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

உரிய அனுமதியின்றி மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளால் வனப்பகுதியின் சூழலுக்கு அச்சுறுத்தல் ஏற்படுவதாக நிஷாந்த எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபடும் நபர்களைக் கண்டறிந்து அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென வனப்பாதுகாப்பு ஆணையாளர் நாயகம் நிஷாந்த எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# ரணிலின் வியாக்கியானம்

தற்போதைய ஜனாதிபதியின் பதவிக்காலம் இன்னும் மூன்றரை முதல் நான்கரை மாதங்களுக்குள் பூர்த்தியாகி விடும். அடுத்து என்ன என்று தெரியாமல் தடுமாற்றத்தில் இருக்கின்றார் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க என்பது தெளிவாக - அப்பட்டமாக - வெளிப்படுகின்றது.

என்ன செய்வது என்று தெரியாமல் ஒவ்வொரு நாளைக்கு ஒவ்வொரு விதமான கருத்தை முன்வைக்கின்றார் அவர். அடிக்கடி வெவ்வேறு விதமான யோசனைத் திட்டங்களை மாறி மாறிப் பறக்க - மிதக்க - விடுகின்றார், வெவ்வேறு பட்டங்களை - பலூன்களை - அவ்வப்போது அவர் அவிழ்த்து விடுகின்றார் என்றெல்லாம் இப்பத்தியில் சுட்டிக்காட்டி வந்துள்ளோம்.

நாடாளுமன்றத்தினதும் ஜனாதிபதியினதும் பதவிக்காலத்தை சர்வஜன வாக்கெடுப்பு மூலம் மேலும் இரண்டு வருடங்களுக்கு நீடிப்பது என்ற திட்டத்தை தமது கட்சியின் செயலாளர் மூலம் அவர் அவிழ்த்து விட்டமையும் அந்த வகையைச் சேர்ந்ததுதான். அந்த யோசனைக்கு நாலாபுறத்திலிருந்தும் பெரும் எதிர்ப்புக் கிளம்பியதும் மெல்லப் பின்வாங்கி, திட்டமிட்டபடி ஜனாதிபதி தேர்தல் நடக்கும் என்று இப்போது கூறுகிறார். அப்படி நடந்தால் நல்லதுதான்.

அந்தத் தேர்தலை ஒட்டிப் புதிய குழப்பக் கருத்து ஒன்றையும் அவர் இப்போது அவிழ்த்து விட்டிருக்கின்றார்.

வரக்கூடிய ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட விருப்பம் தெரிவித்த வேட்பாளர்கள் எவரும் நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிப்பது தொடர்பில் திட்டவட்டமான கருத்தை முன்வைக்கவில்லை என்ற ஒரு திசை திருப்பல் விவகாரத்தை அவர் இப்போது நகர்த்தியிருக்கின்றார்.

நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறையினால் பல நலன்கள் உள்ளன என்று வேறு அவர் புதிதாக வாதாடவும் தொடங்கி இருக்கிறார்.

யுத்தத்துக்கு மத்தியிலும் நிறைவேற்றதிகார ஜனாதிபதிகளான ஜே.ஆர்.ஜெயவர்தன, ரணசிங்க பிரேமதாஸ போன்றோரால் சாதிக்கப்பட்டவற்றை அவர் சிலாகித்திருக்கின்றார். நிறைவேற்றதிகாரம் கைவசம் இருந்தமையால் யுத்தத்தை மஹிந்த ராஜபக்ஷவினால் வெற்றி கொள்ள முடிந்தது என்றும் அவர் உரைத்திருக்கின்றார்.

ஆனால், இவையெல்லாம் நடந்த பின்னர்தான், 2010, 2015 ஜனாதிபதித் தேர்தல்களில் நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை மாற்ற வேண்டும் என்று அவர் பிரசாரம் செய்தார். அதற்காக ஒற்றைக் காலில் நின்றார்.

இப்போது அந்த அதிகாரத்தை தானே பிரயோகித்துக் கொண்டு, அவர் அந்த ஆட்சி முறை தொடர்பில் வேறு விதமான கதை பேசுகின்றமை வியப்பானது; விநோதமானது.

இந்த நாடாளுமன்றத்திலேயே - 'அறகலய' போராட்டம் வெடிக்க முன்னரே - நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை நீக்குவதற்கு வழி செய்யும் தனிநபர் சட்டப் பிரேரணை ஒன்றை, நாடாளுமன்றத்தில் மூன்று உறுப்பினர்களைக் கொண்ட ஜே.வி.பி. தனது ஓர் உறுப்பினர் மூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தமையை ஜனாதிபதி ரணில் மறந்து விட்டார் போலும்.

அதேபோல 21 ஆவது அரசமைப்பு திருத்தம் என்ற பெயரில் முதலில் ஐக்கிய மக்கள் சக்தியின் செயலாளர் ரஞ்சித் மத்துமபண்டார 2002 ஏப்ரலில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறைமையை முழுமையாக மாற்றும் ஒரு தனிநபர் சட்டமூலப் பிரேரணையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்திருந்தமையையும் ஜனாதிபதி ரணிலுக்கு நினைவில்லை போலும்.

ஜனாதிபதி ரணிலின் தரப்புப்போல் அல்லாமல் அந்த இரண்டு கட்சிகளினதும் சார்பிலும் ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்பாளர்கள் எப்போதோ தயார். தங்கள்கட்சிஇப்போதைய-இந்தநாடாளுமன்றத்திலும் - தத்தமது கட்சித் தரப்பின் நிலைப்பாடுகளாக, தனிநபர் பிரேரணையாக சமர்ப்பித்த நிலைப்பாட்டை இந்தத் தேர்தலிலும் அவர்கள் பிரதிபலிப்பார்கள் என்பது பெரும்பாலும் உறுதியானதுதான்.

அவர்கள் இரண்டு தரப்புகளினதும் தேர்தல் விஞ்ஞாபனங்கள் வரும்போது நிச்சயம் நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறை ஒழிப்புப் பற்றிய அவர்கள் நிலைப்பாடு அவற்றில் இருக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

இந்த ஆட்சி முறையை ஒழிக்க வேண்டும் என்று குரல் எழுப்பிய அண்மைக்கால அரசியல்வாதிகளில் அந்த விடயத்தைமுன்னர்வலியுறுத்திய-தொடர்ந்து வலியுறுத்தி வந்த - மூத்த தலைவர் ரணில்தான்.

இப்போதுஅந்தஅதிகாரத்தைசுவைத்து ரசிக்கும் அவர், அதனால் தம் பழைய நிலைப்பாட்டை புரட்டிப்போட்டு விட்டார் போலும். அதற்கு துணையாக மற்ற ஜனாதிபதி வேட்பாளர்களையும் தவறான முறையில் அவர் வெளிப்படுத்தவும் பார்க்கின்றார் அவர். அவ்வளவுதான்.....!




# பீகாரில் வீசும் வெப்ப அலை: மயங்கி வீழ்ந்த மாணவிகள்

இந்தியாவின் பல பகுதிகளில் வீசும் வெப்ப அலை காரணமாக, பகல் பொழுதில் வீடுகளில் இருந்து வெளியே வர வேண்டாம் என மக்களுக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

டில்லி, உத்தரப் பிரதேசம், பீகார் போன்ற மாநிலங்களில் வெப்பநிலை 45 டிகிரி செல்சியஸை தாண்டியுள்ளது.

இந்த நிலையில், பீகாரின் செய்க்புரா என்ற பகுதியில் உள்ள பாடசாலையில் வெப்ப அலையை தாங்கிக்கொள்ள முடியாத மாணவிகள் சிலர் அடுத்தடுத்து மயக்கமடைந்துள்ளனர்.

இதனையடுத்து, மாணவிகளுக்கு பாடசாலையில் முதலுதவி வழங்கப்பட்டு, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் தற்போது நலமாக இருக்கின்றனர் என மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

வெப்பம் காரணமாக உடலில் இருந்து வியர்வையாக நீர் அதிகளவில் வெளியேறும் என்பதால், அதிக அளவில் நீர் அருந்த வேண்டும் என மருத்துவர்கள் அறிவுறுத்தல் விடுத்துள்ளனர்.

பெகுசாராய் என்ற பகுதியிலும் மாணவிகள் மயக்கமடைந்த நிலையில், மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான காணொளிகள் சமூக வலைத்தளங்களில் பகிரப்பட்டுள்ளன.

# சீனாவை பின்தள்ளி உலக நாடுகள் இந்தியாவை நோக்கி வருகின்றன

## ஜெய்சங்கர் தெரிவிப்பு

சீனாவை பின் தள்ளிய சர்வதேச நாடுகள் தற்போது இந்தியாவை நோக்கிய வருகின்றன என்று இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் குறிப்பிட்டுள்ளார்.

இமாச்சலப் பிரதேசத்தின் சிம்லாவில் பொருளாதார நிபுணர்கள் உள்ளிட்டோர்களுடனான கலந்துரையாடலின்போதே, ஜெய்சங்கர் இதனை குறிப்பிட்டுள்ளார். இதன் போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

“கொரோனா தொற்றுக்கு பிறகு சீனாவை நம்பியிருக்கும் உலக நாடுகள், ஆபத்தை உணர்ந்திருக்கின்றன. இதனால் இந்தியாவுக்கான வாய்ப்புக்கள் சர்வதேச அளவில் அதிகரித்துள்ளன.

கொரோனா தொற்றையடுத்து சீனா குறித்து உலக நாடுகள் மிகவும் கவனமாக உள்ளன. மிகச் சாதாரண பொருள்கள் கூட சீனாவிலிருந்து இறக்குமதி செய்த உலக நாடுகள், கொரோனா தொற்று காலத்தில் பொருள்களை பெற முடியாமல் தவித்தன. இதனால், இந்தியாவை நோக்கி அந்தா நாடுகள் நகர்ந்துள்ளன.



மேலும், டிஜிட்டல் தன்மை, வணிகத்தில் நிலையான தன்மை, தலைமைத்துவம், நல்ல நிர்வாகம் மற்றும் நம்பிக்கை ஆகியவற்றின் மூலம், உலக வணிகத்தை, இந்தியா நோக்கி வர மேலும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இனி உலக நாடுகள் இந்தியாவை நோக்கி வரும். வளர்ச்சி என்பது இனி அனைவரையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும் என நாம் விரும்புகின்றோம்.” – என்றார்.

# தமிழகத்தில் வாக்கு எண்ணும் பணிக்காக கூடுதல் தேர்தல் அலுவலர்கள் நியமனம்





தமிழகத்தில் 39 தொகுதிகளில் பதிவான வாக்குகள் எண்ணும் பணிக்கு கூடுதல் உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர் என இந்திய தேர்தல் ஆணையம் அரசிதழில் வெளியிட்டுள்ளது.

பல்வேறு அரசு துறைகளில் பணியாற்றும் அரசு அதிகாரிகள் உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

ஒவ்வொரு தொகுதிக்கும் 5 முதல் 20 பேர் உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

மேலும், வாக்கு எண்ணிக்கை நாளன்று தேர்தல் நடத்தும் அலுவலர்களுக்கு உதவியாக இருந்து பணிகளை மேற்கொள்வது இவர்களின் முதன்மையான பணியாக இருக்கும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

# சமூக வலைத்தளங்களில் வைரலாகின்றது ‘உலகை உலுக்கிய மரண ஓலம்’ ஹேஷ்டேக்






பாலஸ்தீனத்தில் அதிக மக்கள் வாழும் ரஃபா நகரில் உள்ள முகாம் மீது கடந்த 26 ஆம் திகதி இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 45 பேர் கொல்லப்பட்டனர்.

ரஃபா நகர் மீது தாக்குதல் நடத்தக்கூடாது என்று சர்வதேச நீதிமன்றம் எச்சரித்திருந்த போதிலும் இஸ்ரேல் அந்தத் தாக்குதலை மேற்கொண்டது.

இதனையடுத்து இஸ்ரேலின் அந்த தாக்குதலுக்கு கண்டனங்கள் வலுத்து வரும் நிலையில் “Al eyes on Rafa” என்ற ஹேஸ்டேக் சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகின்றது.

இதன்படி உலகம் முழுவதிலும் உள்ள சமூக அக்கறை கொண்ட மனிதர்கள் ரஃபா மக்களுக்கு ஆதரவாகக் குரல் கொடுத்து வருகின்றனர்.

மனிதாபிமான உதவிகள் உள்ளே வரமுடியாத வகையில் ரஃபா எல்லை துண்டிக்கப்பட்டுள்ளதால் இந்தத் தாக்குதலில் படுகாயமடைந்தவர்களுக்கு மருத்துவ உதவி கிடைப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

எரிந்து கருகிய நிலையிலுள்ள தங்களது குழந்தைகளின் உடலங்களை கையில் சுமந்தபடி தாய்மார்கள் நிலைகுலைந்து நிற்கின்றனர்.

அத்துடன் திரும்பிய திசையெல்லாம் குழந்தைகளின் மரண ஓலமே கேட்கின்றது.

பாலஸ்தீனம் மீது இஸ்ரேல் மேற்கொண்டு வரும் தாக்குதலில் இதுவரை 36 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் உயிரிழந்துள்ளனர்.

இதில் பெண்களும் குழந்தைகளுமே அதிகளவில் உயிரிழந்துள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.



# தென்மேற்கு ஐஸ்லாந்தில் எரிமலை வெடித்துள்ளது

தென்மேற்கு ஐஸ்லாந்தில் உள்ள எரிமலையொன்று வெடித்துள்ளது.

அந்த பகுதியில் கடந்த வருடம் டிசம்பர் மாதத்திற்கு பிறகு எரிமலை வெடித்த ஐந்தாவது சந்தர்ப்பம் இது வாகும்.

சுமார் 8 வாரங்களாக உருகிய பாறையின் நீரூற்றுக்களை உமிழ்ந்த பின்னர் ரெய்க்ஜேனெஸ் தீபகற்பத்தில் மற்றுமொரு வெடிப்பு ஏற்பட்டதால் இந்த சம்பவம் ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக அந்த பகுதியில் அபாயம் நிலவுவதாக அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

ஆகையால் தொடர்ச்சியாக ஐஸ்லாந்தில் இவ்வாறான எரிமலை வெடிப்புச் சம்பவங்கள் பதிவாகுகின்றன.





# புதுப்பிக்கத்தக்க வலுசக்தித் துறையின் மாற்றத்திற்கு விரிவான திட்டம் அவசியம்

## ஜனாதிபதி வலியுறுத்தல்

இலங்கையில் புதுப்பிக்கத்தக்க வலுசக்தியைப் பயன்படுத்துதல் மற்றும் பசுமை ஹைட்ரஜன் உற்பத்தியின் எதிர்காலப் போக்குகள் குறித்து ஆராய விரிவான திட்டம் ஒன்றின் அவசியத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தினார்.

கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் நேற்று இடம்பெற்ற "வலுசக்தி மாற்றத்தின் எதிர்காலப் பாதை" எனும் தலைப்பில் இடம்பெற்ற வட்டமேசை கலந்துரையாடலில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைச் சுட்டிக் காட்டினார்.

உலக வங்கி, மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சு மற்றும் இலங்கை மின்சார சபை ஆகியவற்றால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த வட்டமேசைக் கலந்துரையாடல், இலங்கையின் வலுசக்தி மாற்றம் குறித்து கலந்துரையாடும் தளமாக அமைந்தது.

அதன்போது, உள்நாட்டு நிபுணத்துவத்தைப் பெறுவதில் உள்ள சிரமங்களைப் பற்றிக் குறிப்பிட்ட ஜனாதிபதி, உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் உட்பட அனைத்து தரப்பினரையும் ஆதரவு வழங்குமாறு கேட்டுக் கொண்டார்.

இதன்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் கருத்து தெரிவிக்கையில் –

"வங்குரோத்து நிலையிலிருந்து மீள்வதற்காக செயற்படும் இலங்கை தற்போது புதிய பொருளாதார கட்டமைப்பில் கவனம் செலுத்தியுள்ளது. விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட பசுமைப் பொருளாதாரமாக மாறுவதே எமது நோக்கமாக உள்ளதுடன், அதிக போட்டித்தன்மை கொண்ட ஏற்றுமதி சார்ந்த பொருளாதாரமாக அது இருக்க வேண்டும்.

நாம் ஏற்கனவே, அந்த நடவடிக்கைகளை திட்டமிட்டுள்ளமையுடன், பொருளாதாரத்தின் சில புதிய துறைகளும் அடையாளம் காணப்பட்டுள்ளன. இதன்போது, இலங்கையில் கிடைக்கும் புதுப்பிக்கத்தக்க வலுசக்தி மற்றும் பசுமை ஹைட்ரஜன் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதுடன், புதுப்பிக்கத்தக்க வலுசக்தி துறையில் இலங்கை முன்னணியில் வருவதற்கான அதிக சாத்தியக்கூறுகளைக் கொண்டுள்ளது.

மேலும், இலங்கையின் உலர் வலயப் பிரதேசத்தில் காற்றாலை வலுசக்தி உற்பத்திக்கான சாத்தியக்கூறுகளுடன், அத்துறையில் விரைவான அபிவிருத்தியை அடைவதை நோக்கமாகக் கொண்டுள்ளோம். இது பூஜ்ஜிய உமிழ்வு நிலையை அடைவதற்கான இலங்கையின் அர்ப்பணிப்பிற்கு இணங்குவதுடன், 2040 ஆம் ஆண்டளவில் இந்த இலக்குகளை அடைவதை நோக்கமாகக் கொண்டுள்ளோம்.

மின்சாரம் மற்றும் வலுசக்தி அமைச்சிற்கு ஏற்கக்கூடிய பல திருத்தங்களுடன் இரண்டு நாட்களுக்கு முன்பு உயர் நீதிமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட மின்சார சீர்திருத்த சட்ட மூலத்தை நாம் ஏற்கனவே முன்வைத்துள்ளோம். எதிர்வரும் மாதத்தில் இந்த சட்ட மூலத்தை நாடாளுமன்றத்தில் விவாதித்து நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும், பொருளாதார மாற்ற சட்டமூலம் ஏற்கனவே நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இது இப்போது உயர் நீதிமன்றத்தில் சவாலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது, மேலும் இது நிச்சயமாக இந்த ஜூலை தொடக்கத்தில் சட்டமாக மாறும். எனவே, இந்த நடவடிக்கைகள் தற்போது அரசமைப்பு சபையில் நடைபெற்று வருகின்றன.

மேலும், காலநிலை மாற்ற சட்டம் ஏற்கனவே தயாரிக்கப்பட்டு வருகிறது, இது தொடர்பான மூன்றாவது சட்டமாகும். நான்காவதாக, வலுசக்தி மாற்றத்திற்கான சட்டத்தை நாம் கலந்துரையாட வேண்டும். சில நாடுகளில் வலுசக்தி மாற்றம் தொடர்பான சட்டங்கள் உள்ளன. நாங்கள்

12












# புதுப்பிக்கத்தக்க வலுசக்தித் துறையின் மாற்றத்திற்கு விரிவான திட்டம் அவசியம்

## ஜனாதிபதி வலியுறுத்தல்

(11ஆம் பக்கத் தொடர்ச்சி...)

அவற்றை ஆய்வு செய்து வருகிறோம், மேலும் தெற்கு ஆஸ்திரேலியா போன்ற சில பகுதிகளில் அந்தச் சட்டங்கள் எவ்வாறு செயல்படுத்தப்படுகின்றன என்பதையும் ஆய்வு செய்துள்ளோம். வலுசக்தி மாற்றத்திற்கான சட்டத்தை உருவாக்குவதற்கு இது நமக்கு பயனுள்ளதாக இருக்கும்.

மின்சாரம் உற்பத்தி செய்வதற்கு மட்டுமின்றி, மின்சாரம் விநியோகிப்பதற்கும் அந்த துறைகளைத் திறந்து விடுகிறோம். அதன்போது தனியார் துறை முக்கிய பங்கு வகிக்கும்.

அது இல்லாமல், 2040 அல்லது 2050 க்குள் எங்கள் இலக்குகளை அடைய வேறு எந்த வழியும் இல்லை. நிதி அமைச்சும் ஏனைய துறைகளுடன் இந்த நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து வருகிறது.

சுற்றாடல் அமைச்சும் மற்றும் மின்சார அமைச்சும் பசுமை நிதியியல் தொடர்பான கொள்கைகளை உருவாக்கி வருகின்றன. இவை பசுமை ஹைட்ரஜனுக்கு மாறுவதற்கும் புதுப்பிக்கத்தக்க வலுசக்தியைப் பயன்படுத்துவதற்கும் எங்களின் திட்டங்களாகும்.

40 ஜிகாவோட் என மதிப்பிடப்பட்ட பசுமை ஹைட்ரஜனுக்கான அதிக வலுசக்தி நம்மிடம் உள்ளது. சில நேரங்களில் அது இன்னும் அதிகமாக இருக்கலாம். மன்னார் பசுமை ஹைட்ரஜன் உற்பத்திக்கான குறிப்பிடத்தக்க சாத்தியக்கூறுகளைக் கொண்டுள்ளது. ஆனால் அதில் பல பிரச்சினைகள் உள்ளன, அவற்றுக்குத் தீர்வு காண வேண்டும். அங்கு தனியார் துறை முதலீடுகளைப் பெற அவர்களை ஊக்குவிக்க வேண்டும். இந்தியா ஏற்கனவே தனது திட்டங்களில் பசுமை ஹைட்ரஜனை ஏற்றுமதி செய்வதை உள்ளடக்கியுள்ளது, அதற்காக அவர்கள் கணிசமான அளவு பசுமை ஹைட்ரஜனை உற்பத்தி செய்து வருகின்றனர்.

மேலும், கடலுக்கு அடியில் புதிய கேபிள் இணைப்புக்கள் கட்டமைக்கப்பட்டு அதனூடாக மின்சாரம் விநியோகிக்கப்படுகிறது. அதன்படி ஆஸ்திரேலியா – சிங்கப்பூர், சிங்கப்பூர் – இந்தியாவுக்கும் இடையேயான இணைப்புகள் ஏற்படுத்தப் படவுள்ளன. கடலுக்கு அடியில் உள்ள இந்தியா–சிங்கப்பூர் கேபிளை இலங்கையுடன் இணைக்க வாய்ப்பு உள்ளது. பசுமை ஹைட்ரஜனைப் பயன்படுத்தும் பட்சத்தில் இலங்கை வலயத்தின் நீண்டகால விநியோக மத்தியஸ்தானமாக மாறுவதற்கான சாத்தியங்கள் உள்ளன.

பசுமை ஹைட்ரஜன் வளங்கள் நிறைந்த பகுதிக்கு அருகில் திருகோணமலை, அம்பாந்தோட்டை மற்றும் கொழும்பு ஆகிய மூன்று துறைமுகங்கள் நம்மிடம் உள்ளன. இந்தியாவுடன் தரைவழிப் பாதை மற்றும் தென்னிந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையே தரைவழி இணைப்பு குறித்தும் ஆலோசித்து வருகிறோம். அதனால் தென்னிந்தியாவை அண்மித்துச் செல்லும் வாய்ப்பு எமக்கு கிடைக்கும். இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையிலான வலுசக்தி தொடர்பைபலப்படுத்துவதுகுறித்துநாம்ஏற்கனவேஆலோசித்து வருகிறோம். இவை அனைத்தும் சரியாக நடைபெறும் என நாம் எதிர்பார்க்கின்றோம்.” – என்றார்.






# ஜனாதிபதித் தேர்தலில் பேரம் பேசும் ஏமாற்று அரசியல் இனியும் வேண்டாம்

## தமிழர் நாம் திடசித்தத்துடன் முன்நகர்வோம் யாழ். பல்கலை மாணவர் ஒன்றியம் அறிக்கை

"வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களின் வாக்குகள் சிங்கள – பௌத்த பேரினவாதத்தின் முகவர்களுடனான பேரம் பேசலுக்காகப் பலியாக்கப்படாது. தமிழ் மக்களின் நலன்களைக் கருத்தில்கொண்டு, தமிழ் அரசியல் கட்சிகள் மற்றும் குடிமக்கள் சமூகத்தினர் ஒன்றுபட்டுத் தீர்க்கமான முடிவொன்றைத் திடசித்தத்துடன் மேற்கொள்வதற்கு யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர் சமூகமாக வலியுறுத்தி நிற்கின்றோம்."

– இவ்வாறு யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

"இலங்கையின் அரச தலைவரைத் தேர்வு செய்யும் தேர்தல் தொடர்பான பேச்சுக்கள் முனைப்புப் பெற்றுள்ள நிலையில், கட்டமைக்கப்பட்ட இனவழிப்புப் பொறிமுறைகளிற்குள் சிக்குண்டு இனவிடுதலை வேண்டி நிற்கும் ஈழத்தமிழ் மக்கள் தமது அரசியல் விடுதலைப்பயணத்தில் இத்தேர்தல் களத்தினை தங்கள் நலன் சார்ந்து எவ்வாறானதாகக் கையாள வேண்டும் என்பதில் கடந்த கால அனுபவங்களைப் பரிசீலனை செய்து இனியாவது சுதாகரித்து முன்நகர வேண்டிய அவசிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.

2009 இற்குப் பின்னரான 15 ஆண்டுகள் காலத்தில் சாணக்கியம், இராஜதந்திரம் என்னும் பெயரில் வெற்று வாக்குறுதிகளை மாத்திரமே நம்பி தமிழ்த் தரப்புக்களால் முன்னெடுக்கப்படும் பேரம் பேசும் இணக்க அரசியலினால் தமிழின அழிப்பிலிருந்து தாயகத்தின் ஓர் அங்குல நிலத்தையேனும் காப்பாற்ற முடியவில்லை என்பதோடு, தமிழ் மக்களும் தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளும் உதிரிகளாக்கப்பட்டுள்ளமையும் அது உளவியல் ரீதியில் தோல்வி மற்றும் அடிமைத்துவ மனநிலையினை மக்களிடையே விதைப்பதிலுமே வெற்றியடைந்துள்ளது.

+ ஈழத்தமிழ் மக்களை அரசியல்படுத்தி அணிதிரட்டுதல்.

+ போருக்குப் பின் மக்களிடையே உள்ள தோல்வி மனோநிலையினை அகற்றுதல்.

+ வடக்கு – கிழக்குக்கான பொருளாதாரக் கட்டமைப்பை நிறுவுதல்.

+ அரசற்ற தரப்பாக பன்னாடுகளைக் கையாள்வதற்கான வெளிவிவகாரக் கொள்கை மற்றும் கட்டமைப்பை உருவாக்குதல்.

+ பன்னாட்டுச் சமூகத்தில் கூட்டாகத் தமிழரின் குரலை முன்வைத்தல்.

+ வடக்கு – கிழக்கில் முன்னெடுக்கப்படும் தொடர்ச்சியான கட்டமைக்கப்பட்ட இனவழிப்பினை தடுத்துநிறுத்துதல்.

+ அதிகாரப் பகிர்வோடு எவ்விதத்திலும் தொடர்பற்ற இலங்கை ஒற்றையாட்சி அரசமைப்புக்குட்பட்ட 13ஆம் திருத்தத்திற்கு அப்பால் தமிழ் அரசியலை நகர்த்துதல்.

ஓர் அரசற்ற தரப்பாக எமது தமிழ்ச் சமூகத்தினால் அடைந்து கொள்ளப்பட்டிருக்க வேண்டிய மேற்குறிப்பிட்ட விடயங்கள் எதனையும் சாதித்திராத தமிழ் அரசியல் தரப்புக்கள் தொடர்ந்தும் பேரம் பேசும் அரசியலால் இனியும் எதையாவது சாதிக்கும் என்பதில் நம்பிக்கையில்லை. தமிழ் அரசியல் கட்சிகளும், குடிமக்கள் சமூகத்தினரும் தமிழ் மக்களின் பின்நோக்கிய இந்நிலையிலாவது தம்மைச் சுதாகரித்துக் கொண்டு தமிழ் அரசியலின் பாதையினை மீளச் சரிவர தகவமைத்துக் கொள்ள வேண்டும்.

கடந்த 2010, 2015, 2019 ஆண்டுகளில் நடைபெற்ற இலங்கையின் அரச தலைவர் தேர்தல்களில் இனப்படுகொலைப் பொறுப்பாளிகளான ஒரு தரப்பினரை எதிர்ப்பதாகக் கூறி, இனப்படுகொலைக் குற்றத்தைப் புரிந்த இலங்கையின் இராணுவத் தளபதி, பதில் பாதுகாப்பு அமைச்சர், போர்க்குற்றம் புரிந்த பெருமளவான இராணுவத்தினரின் ஆதரவைப் பெற்ற நபர்களுக்கே வாக்களிப்பதற்குப் பரிகார நீதி கோரக்கூடிய தமிழ் மக்கள் தவறாக வழிநடத்தப்பட்டோம்.

இனியாவது ஏமாற்று கபட அரசியலுக்குப் பலியாகாமல், தமிழ் மக்களின் வாக்குகள் சிங்கள – பௌத்த பேரினவாதத்தின் முகவர்களுக்கோ, வெளித்தரப்புக்களுக்கோ சென்று சேர்வதைத் தவிர்த்து, தமிழ் மக்களின் அரசியல் வேணவாக்களைப் பிரதிபலிக்கும் தீர்மானங்களை தமிழ் அரசியல் தரப்புக்கள் மேற்கொள்ளத் தவறுமேயானால் நாம் அரசியல் பிழைத்த மக்களாக்கப்படுவோம்.

சமகால அரசியற் களச்சூழலில் தமிழ் மக்களின் முன்னால் உள்ள தெரிவுகள்,

+ இலங்கையின் அரச தலைவர் தேர்தலைப் புறக்கணித்தல்.

+ இலங்கையின் அரச தலைவரைத் தேர்வு செய்வதற்கான தேர்தல் என்ற அடிப்படையில் தற்போது எதிர்பார்க்கப்படும் தேர்தலை நிராகரித்து, அத்தேர்தலை நடைமுறையில் ஈழத் தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளுக்கான அறைகூவல் விடுக்கும் பொதுவாக்கெடுப்பாகக் கையாளும் வகையில் தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்துதல்.

இலங்கையின் அரச தலைவர் தேர்தலைப் புறக்கணித்தல் மற்றும் தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்துதல் இரண்டும் ஒரே கருத்தியலின் இரு வேறுபட்ட பிரயோக வடிவங்களே! தமிழர்களால் அளிக்கப்படாத வாக்குகள் மற்றும் பொது வேட்பாளருக்கு வழங்கப்படும் வாக்குகள் என இரண்டுமே சிங்கள – பௌத்த பெருந்தேசியவாதத்தின் முகவர்களை நிராகரிக்கும் வாக்குகளேயாகும்.

பொது வேட்பாளர் தொடர்பில் தீர்க்கமான முடிவுகள் மேற்கொள்ளப்படும் பட்சத்தில், பின்வரும் விடயங்களில் கூடுதல் கவனம் செலுத்த தமிழ் மக்கள் உள்ளிட்ட தொடர்புபட்ட தரப்புக்கள் அனைவரையும் வலியுறுத்துகின்றோம்.

+ இலங்கையின் அரச தலைவர் தேர்தலைப் புறக்கணிப்பதனாலோ, தமிழ்ப் பொதுவேட்பாளரை நிறுத்துவதனாலோ சிங்கள – பௌத்த பேரினவாதத்தின் முகவர் எவர் வென்றுவிடக் கூடும் எனும் கேள்வி பொதுவில் அனைவரிடமும் எழக்கூடியதொன்று. ஆனால், அரசியல் விடுதலை வேண்டும் சமூகமாக எமக்கு எது தேவை? எமது நிலைப்பாடு என்ன? என்பதுவே நாம் அக்கறை கொள்ளவேண்டியது. அதன் பக்க விளைவுகளைப் பற்றியல்ல.

+ பொது வேட்பாளரை நிறுத்துதல் என்பது எதிர்வரும் சிறிலங்காவின் அரச தலைவர் தேர்தலைத் தமிழ் மக்களின் வேணவாக்களைப் பிரதிபலிக்கும் தேர்தல் ஒன்றாக மாற்றுவதேயாகும். ஆகவே, பொது வேட்பாளர் எனும் எண்ணக்கரு நடைமுறையில் வெற்றி – தோல்விகளுக்கு அப்பாற்பட்டதாகும்.

+ பொது வேட்பாளர் தமிழ் மக்களின் இதுவரைகால வேணவாக்களை பிரதிபலிக்க வேண்டுமேயன்றி, குறிப்பிட்ட சில தரப்புக்களின் அரசியல் நலன்களையல்ல.

+ பொது வேட்பாளர் தமிழ் மக்களின் குறியீடாக நிறுத்தப்பட வேண்டும். முழுமையாக ஆக்கிரமிக்கப்பட்ட கிழக்கு மாகாணத்தை அடையாளப்படுத்தும் வகையில் கிழக்கிலிருந்து வேட்பாளர் தேர்வு நடைபெற வேண்டும். அவ்வேட்பாளர் பெண்ணொருவராக இருப்பின் உத்தமம்.

+ தமிழ் மக்களின் வாக்குகள் என்பது அவர்தம் வேண–வாக்களைச் உறுதிபடச் சொல்வதற்கேயன்றி பேரங்கள் பேசுவதற்கல்ல. ஆகவே, இரண்டாம், மூன்றாம் விருப்பு வாக்குகள் என்ற பேச்சுக்களுக்கே இடமளித்தல் கூடாது.

+ பொது வேட்பாளராக நிறுத்தப்படும் நபர் அரசியல்வாதியல்லாதவராக இருப்பதோடு, தேர்தலின் பின்னர் அந்நபர் எந்தவொரு அரசியல் கட்சியுடனும் இணைந்து செயற்படுவதோ, தேர்தல் அரசியலில் ஈடுபடுவதோ தவிர்க்கப்பட வேண்டும் என்பது முன்நிபந்தனையாக்கப்பட வேண்டும்.

மேற்படி விடயங்களை அடிப்படையாகக் கொண்டு தமிழ் மக்களின் வாக்குகள் இத்தேர்தலிலாவது அவர்களின் உரிமைக் குரலாகப் பிரயோகிக்கப்பட வேண்டும். மேற்கண்ட தெரிவுகளில் தமிழ் அரசியல் கட்சிகள் மற்றும் குடிமக்கள் சமூகத்தினர் உள்ளிட்ட அனைவரும் இணைந்து கூட்டாகத் தீர்மானமொன்றை மேற்கொள்ளும் பட்சத்தில், தமிழ்ப் பொது வேட்பாளரை ஆதரிப்பதற்கும் இணைந்து பயணிப்பதற்குமான எமது உடன்பாட்டை மாணவர் சமூகமாக நாம் வெளிப்படுத்துகின்றோம்.

எதிர்வரும் அரச தலைவர் தேர்தலில் தமிழ் மக்களின் வாக்குகள் சிங்கள – பௌத்த பேரினவாதத்தின் முகவர்களுடனான பேரம் பேசலுக்காகப் பலியாக்கப்படாது. தமிழ் மக்களின் நலன்களைக் கருத்தில்கொண்டு, தமிழ் அரசியல் கட்சிகள் மற்றும் குடிமக்கள் சமூகத்தினர் ஒன்றுபட்டுத் தீர்க்கமான முடிவொன்றைத் திடசித்தத்துடன் மேற்கொள்வதற்கு யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர் சமூகமாக வலியுறுத்தி நிற்கின்றோம்." – என்றுள்ளது.



# ‘றீமால்’ சூறாவளியின் தாக்கம் இன்று தொடக்கம் குறையும்

## வளிமண்டலவியல் திணைக்களம் அறிவிப்பு

‘றீமால்’ சூறாவளியின் தாக்கம் இன்று முதல் குறைவடையுமென வளி மண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

தென்மேற்கு பருவப்பெயர்ச்சியின் காரணமாக, எதிர்வரும் இரண்டு அல்லது மூன்று தினங்களில் நாட்டின் தென் மேற்கு பிராந்தியத்தில் மழையுடனான வானிலை நிலவும் என திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இதனிடையே, மழையுடனான வானிலை காரணமாக 10 ஆயிரத்து 483 குடும்பங்களை சேர்ந்த 39 ஆயிரத்து 156 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கம்பஹா மாவட்டத்திலேயே அதிகளவானோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, 8 மாவட்டங்களின் சில பிரதேச செயலகங்களுக்கு விடுக்கப்பட்டுள்ள மண்சரிவு அபாய எச்சரிக்கை தொடர்ந்தும் நீடிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு, காலி, கம்பஹா, களுத்துறை, கண்டி, கேகாலை, நுவரெலியா மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களின் சில பிரதேச செயலக பிரிவுகளுக்கே இவ்வாறு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.




# பிரதான மார்க்கத்தில் ரயில் சேவை தாமதம்

பிரதான ரயில் மார்க்கத்தில் ரயில் சேவைகள் தாமதமடைந்துள்ளன.

கம்பஹா ரயில் நிலையத்திற்கு அருகில் ரயிலொன்றில் தொழில்நுட்பக் கோளாறு ஏற்பட்டுள்ளமையே இதற்குக் காரணமென ரயில்வே போக்குவரத்து அத்தியட்சகர் எம்.ஜே. இந்திபொலகே தெரிவித்துள்ளார்.

மீரிகமவில் இருந்து கொழும்பு கோட்டை நோக்கி பயணித்த ரயிலிலேயே இவ்வாறு இயந்திரக் கோளாறு ஏற்பட்டுள்ளது.

இயந்திரத்தை சீர்செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ரயில்வே போக்குவரத்து அத்தியட்சகர் தெரிவித்துள்ளார்.



# அமரர் ஆறுமுகம் தொண்டமானின் 60ஆவது ஜனனதினம் அனுஷ்டிப்பு

(ஆ.ரமேஸ்)

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் முன்னாள் தலைவரும் அமைச்சருமான அமரர் ஆறுமுகம் தொண்டமானின் 60 ஆவது ஜனன தினம் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

இதனையொட்டிய நிகழ்வு கொட்டகலை சி.எல்.எவ். கேட்போர் கூடத்தில் அமைச்சர் ஜீவன் தொண்டமான் தலைமையில் இடம்பெற்றது.

அதேநேரத்தில் கொட்டகலை ஆலயத்தில் விசேட பூசைவழிப்பாடுகள் மற்றும் அமரர் ஆறுமுகன் தொண்டமான் உருவப்படத்திற்கு மாலை அணிவித்து ஒரு நிமிட மௌன அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

இதன்போது இ.தொ. காவின் பிரதித் தலைவர்களான, அனுஷியா சிவராஜா,கணபதி கனகராஜ் ,தேசிய அமைப்பாளர் சக்திவேல், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜதுறை, போசகர் ஜெகதிஸ்வரன், முன்னாள் பிரதேசசபைத் தலைவர்கள், உறுப்பினர்கள், இ.தொ.காவின் மாவட்டத் தலைவர்கள், தலைவிகள், தோட்டத் தலைவர்கள், தலைவிகள் உட்படப் பலர் கலந்துக்கொண்டனர்.










# யாழில் விபத்து, அவசர சிகிச்சைப் பிரிவின் 5 ஆம் வருட விழா நிறைவு நிகழ்வுகள் நேற்று

யாழ். போதனா வைத்தியசாலையின் விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவின் ஐந்தாம் வருட விழா நிறைவு நிகழ்வுகள் வைத்தியசாலையில் நேற்றுக் கொண்டாடப்பட்டது.

விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவு ஆரம்பிக்கப்பட்டு ஐந்து ஆண்டுகள் பூர்த்தி செய்யப்பட்டதை ஒட்டி கேக் வெட்டிக் கொண்டாடப்பட்டது.

இந்த நிகழ்வில் வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ், வட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் சமன் பத்திரன, யாழ் மாவட்ட பதில் அரசாங்க அதிபர் ம.பிரதீபன், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி, யாழ் மருத்துவ சங்கத் தலைவர் சுதர்சன், அரச மருத்துவ சங்கத்தின் உப தலைவர் சத்திர சிகிச்சை நிபுணர் எஸ் மதிவாணன், வைத்திய நிபுணர்கள், தாதிய பயிற்சி கல்லூரி அதிபர் மற்றும் தாதியர்கள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தனர்.

இதன் போது உரையாற்றிய யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி, தற்போது யாழ்ப்பாண போதன வைத்தியசாலையானது தேசிய வைத்தியசாலையாக தரமுயர்த்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவரும் நிலையில் வைத்தியசாலை தொடர்பில் பல்வேறுபட்ட குற்றசாசாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

வைத்தியசாலையை கோயிலைப் போல் பயன்படுத்த வேண்டும். இவை பொது மக்களுக்கு சேவை வழங்கும் ஓர் இடமென்பதை அனைவரும் மனதில் கொண்டு செயற்பட வேண்டும் என்றும் பணிப்பாளர் இதன் போது சுட்டிக்காட்டினார்.

















# நாட்டின் மொத்த உத்தியோகபூர்வக் கையிருப்பு 5.5 பில்லியன் அமெரிக்க டொலராக அதிகரிப்பு

## நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தகவல்



ஏப்ரல் மாத இறுதிக்குள் இலங்கை யின் மொத்த உத்தியோகபூர்வ கையி ருப்பு 5.5 பில்லியன் அமெரிக்க டொலர் களாக அதிக ரித்துள்ளதாக நிதி இரா ஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

வருடத்தின் இதுவரையான காலப் பகுதியில் அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி சுமார் 8 வீதத்தால் வலுவடைந்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

ரூபாவின் பெறுமதி உயர்வதென்பது பணவீக்கம் மற்றும் ஒட்டுமொத்த வாழ்க் கைச் செலவை குறைக்கவும் வெளி நாட்டு கடனைத் திருப்பிச் செலுத்துவதை எளி தாக்கவும் உதவுமென்பதை அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இதன்மூலம் உலகளாவிய ரீதியில் இலங்கையின் நிதி வலு மீதான நம் பிக்கை அதிகரிக்கும் என நிதி இரா ஜாங்க அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.



# மண்சரிவு அதி அபாயப் பிரதேசங்களில் 300 இற்கும் மேற்பட்ட பாடசாலைகள்

மண்சரிவு அதி அபாய பகுதிகளில் 300 இற்கும் மேற்பட்ட பாடசாலைகள் காணப்படுகின்றன என தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் தெரிவித்தது.

அடையாளம் காணப்பட்டுள்ள மேற்படி பாடசாலைகள் அமைந்துள்ள பகுதியில் அனர்த்தங்களை கட்டுப்படுத் தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட் டுள்ளன என தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகத்தின் மண்சரிவு ஆய்வு பிரிவின் பணிப்பாளர் காமினி ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அத்துடன், மண்சரிவு அதி அபாய பகுதிகளில் பல்வேறு அரச நிறுவனங்க ளும் காணப்படுகின்றன என அவர் தெரிவித்துள்ளார். இதேவேளை, மண்சரிவு அபாய முள்ள பகுதிகளில் சுமார் 14 ஆயிரம் குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. அதில் 2,600 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வேறு இடங் களில் குடியமர்த்தப்பட்டுள்ளன என அவர் தெரிவித்துள்ளார்.

2,500 இற்கும் மேற்பட்ட குடும்பங் களை பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றுவதற்கான நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளன என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, பதுளை, இரத்தினபுரி, கேகாலை ஆகிய மாவட்டங்களிலேயே அதிகளவான பிரதேசங்கள் மண்சரிவு அதி அபாய இடங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன என அவர் தெரிவித் துள்ளார்.



### இரத்தினபுரி - எம்பிலிபிட்டிய பிரதான வீதியில்

# பஸ் - ஓட்டோ மோதுண்டு இரண்டுமே பள்ளத்தில் குடை சாய்ந்து வீழந்தன!

## பெண் பலி; 29 பேர் காயம்; இருவர் நிலை மோசம்

(எஸ்.இரவீந்திரன்)

இரத்தினபுரி – எம்பிலிபிட்டிய பிரதான வீதியில், பெல்மதுளை பொலிஸ் பகுதியில் ரில்ஹேன எனுமிடத்தில் நேற்று இடம் பெற்ற விபத்தில் பெண் ஒருவர் உயிரிழந்தார். 29 பேர் காயமடைந்து இரத்தினபுரி மற்றும் காவத்தை வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இவர்களில் இருவர் படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் இரத்தினபுரி வைத்திய சாலையின் அவசரப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனப் பொல்ஸார் தெரிவிக்கின்றனர்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரிய வருவதாவது:-

கொழும்பிலிருந்து எம்பிலிப்பிட்டிய நோக்கி சென்ற தனியார் பஸ் ஒன்று, அதற்கு முன்னதாக கட்டுநாயக்காவிலிருந்து பசறையை நோக்கிச் சென்று கொண்டிருந்த ஓட்டோ ஒன்றுடன் மோதியது. இதையடுத்து வாகனங்கள் இரண்டும் குடை சாய்ந்து பள்ளத்தில் வீழ்ந்துள்ளன.

இந்த விபத்தில் பசறையைச் சேர்ந்தவரும், டுபாய் நாட்டில் கடமையாற்றி விட்டு நாடு திரும்பி, விமான நிலையத்திலிருந்து ஓட்டோவில் வீடு திரும்பிக் கொண்டிருந்தவருமான பெண் ஒருவரே உயிரிழந்திருக்கின்றார்.

ஓட்டோவின் சாரதியும் அதில் பயணம் செய்த மற்றொருவருமே ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்கள்.

பொலிஸார், பஸ் சாரதியைக் கைது செய்து விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, கொழும்பு – மீகொட பிரதான வீதியின் ஹபரகட பிரதேசத்தில் கப் வாகனமொன்று விபத்திற்குள்ளானதில் 44 வயதான ஒருவர் உயிரிழந்துள்ளார்.









# 1,700 ரூபா சம்பளம் தொடர்பான வழக்கு மீண்டும் நாளை எடுத்துக் கொள்ளப்படும்

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் தொடர்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு நாளை 31 ஆம் திகதி மீண்டும் நீதிமன்றத்தில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த சம்பளத்தை 1,700 ரூபாவாக அதிகரிக்க வேண்டும் என கடந்த 21 ஆம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானியை வலுவற்றதாக்கும் எழுத்தாணைக் கட்டளையைப் பிறப்பிக்குமாறு கோரி 21 பெருந்தோட்ட நிறுவனங்கள் இந்த வழக்கைத் தாக்கல் செய்திருந்தன.

கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் இந்த மனு நேற்றுப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

அரசாங்கம் மேற்கொண்டுள்ள தீர்மானத்தை செயற்படுத்தினால், தற்போது கூட நட்டத்தில் இயங்கும் தமது நிறுவனங்கள் முழுமையாக செயலிழக்கும் எனவும், பெருந்தோட்ட நிறுவனங்களுடன் கலந்துரையாடாமல் இந்தத் தீர்மானத்தை மேற்கொண்டுள்ளமையினால், அதனை செல்லுபடியற்றதாக்குமாறும் இந்த மனுவில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நீதிபதிகளான சோபித்த ராஜகருணா, தம்மிக்க கணேபொல ஆகியோர் முன்னிலையில் மனு மீதான விசாரணை நேற்று நடைபெற்றது.

இரண்டு தரப்பு வாதங்களையும் கவனத்திற்கொண்ட நீதிபதிகள் குழாம், வழக்கு மீதான பரிசீலனை மீண்டும் நாளை நடைபெறும் என அறிவித்தது.

அமைச்சர் மனுஷ நாணயக்கார, தொழில் அமைச்சின் செயலாளர், தொழில் ஆணையாளர் நாயகம், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளர் ஜீவன் தொண்டமான் உள்ளிட்டவர்கள் மற்றும் நிறுவனங்கள் அடங்கலாக 52 தரப்பினர் இந்த வழக்கின் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

இதேவேளை, அரசாங்கத்தின் அனைத்து தோட்டங்களிலும் அடுத்த மாதம் 10 ஆம் திகதி 1,700 ரூபா சம்பளம் வழங்கப்படும் என தொழில், வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார நேற்று முன்தினம் தெரிவித்திருந்தார்.

எனினும், தற்போதைய பொருளாதார சூழ்நிலையில் அதனை செலுத்துவதற்கான இயலுமை நிறுவனங்களுக்கு இல்லையெனவும் உற்பத்திக்கு ஏற்ற கொடுப்பனவு முறையையே தம்மால் செயற்படுத்த முடியும் எனவும் பெருந்தோட்ட நிறுவனங்கள் சம்மேளத்தின் ஊடகப்பேச்சாளர் ரொஷான் இராஜதுரை தெரிவித்துள்ளார்.

நாளை வெள்ளிக்கிழமை நீதிமன்ற முடிவின் பின்னர் அடுத்த கட்ட நடவடிக்கைகள் தீர்மானிக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## சட்டவிரோதமாக தங்கம் இறக்குமதி:

# ஐந்து நிறுவனங்களுக்கு எதிராக 1,243 மில்லியன் ரூபா அபராதம்!

சட்டவிரோதமாக தங்கத்தை இறக்குமதி செய்த ஐந்து நிறுவனங்களுக்கு 1,243 மில்லியன் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

நேரடி இறக்குமதியின்றி, மூன்றாம் தரப்பினரிடமிருந்து கொள்வனவு செய்யப்படும் தங்க ஆபரணங்களுக்கும் அபராதம் விதிக்கப்படும் என இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

வருடத்தின் இதுவரையிலான காலப்பகுதிக்குள், இலங்கைக்கு சட்டவிரோதமான முறையில் தங்கத்தை இறக்குமதி செய்த ஐந்து நிறுவனங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன எனவும், அந்த நிறுவனங்களுக்கு 1243 மில்லியன் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.



அத்துடன், சட்டவிரோத இறக்குமதியுடன் தொடர்புடைய நிறுவனமொன்றுக்கு 179 மில்லியன் ரூபாவை செலுத்துமாறு உத்தரவிடப்பட்டுள்ளதாகவும் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

இதன் பின்னர், தங்கப் பொருள்களை இறக்குமதி செய்யும், அனைத்து உரிமம் பெற்ற நிறுவனங்களும், சட்டவிரோத செயல்களைத் தவிர்க்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

மேலும், நேரடியாக இறக்குமதி செய் யாமல், மூன்றாம் தரப்பினர் ஊடாக கொள்வனவு செய்யப்படும் தங்கத் திற்கும், உற்பத்தி அறிக்கையினை ஆராய்ந்து, அதன் பிரகாரம் அபாராதம் விதிக்கப்படும் எனவும் ரஞ்சித் சியம் பலாபிட்டிய சுட்டிக்காட்டியுள்ளார்.

# ஐ.எஸ். சந்தேகநபர்கள் பற்றி போலித் தகவல்களை வெளியிட்ட பல்கலைக்கழக விரிவுரையாளர் கைது!



இந்தியாவில் கைது செய்யப்பட்ட ஐ.எஸ்.ஐ.எஸ். இயக்கத்தின் உறுப்பினர்கள் தொடர்பில் போலியான தகவல்களை ஊடகத்தில் வெளியிட்டார் எனக் கூறி கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர் கலாநிதி புன்சர அமரசிங்க பயங்கரவாத ஒழிப்பு மற்றும் விசாரணைப் பிரிவினால் நேற்றுக் கைது செய்யப்பட்டார்.

குஜராத் மாநிலத்தின் பயங்கரவாத ஒழிப்புப் பிரிவினால் கைது செய்யப்பட்ட நான்கு இலங்கையர்களுக்கும் புனர்வாழ்வளிக்க வேண்டும் என உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் விசாரணை நடத்திய ஆணைக்குழுவொன்றின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்ததாக அவர் வெளியிட்ட கருத்து தொடர்பிலேயே அவர் கைது செய்யப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கலாநிதி புன்சர அமரசிங்க, கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் சர்வதேச சட்டம் தொடர்பிலான விரிவுரையாளராவார்.

ஊடகத்தில் வெளியிட்ட கருத்துகள் தொடர்பில் கலாநிதி புன்சர அமரசிங்கவிடம் வினவியபோது, தமக்கு எதுவும் தெரியாது என அவர் கூறியமையால் அவரைக் கைது செய்தனர் என பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர், சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

கோட்டை நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று பிற்பகல் ஆஜர்படுத்தப்பட்டதை அடுத்து, கலாநிதி புன்சர அமரசிங்க 10 லட்சம் ரூபா சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, ஐ.எஸ்.ஐ.எஸ். இயக்கத்தின் உறுப்பினர்களுடன் தொடர்புகளை பேணிய சந்தேகத்தின் பேரில் சிலாபம் – பங்கதெனியவில் இருவரை குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினர் கைது செய்துள்ளனர்.

இந்த சம்பவங்கள் தொடர்பில் ஒஸ்மன் ஜெராட் என்பவரை கைது செய்வதற்காக அண்மையில் பொலிஸார் பொதுமக்களின் ஒத்துழைப்பைக் கோரினர்.

ஒஸ்மன் ஜெராட் என்பவரின் இரண்டு சகோதரர்களே பங்கதெனியவில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தியாவில் கைது செய்யப்பட்டவர்களை ஒஸ்மன் ஜெராட் இலங்கையிலிருந்து வழிநடத்தியிருந்தார் எனப் பாதுகாப்புத் தரப்பினர் கூறுகின்றனர்.

கடந்த 21 ஆம் திகதி ஹமீட் அமீர் என்பவரையும் பயங்கரவாத ஒழிப்புப் பிரிவினர் கைது செய்தனர்.

ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாதிகள் என கூறி நான்கு இலங்கையர்களை கடந்த 20 ஆம் திகதி அஹமதாபாத் விமான நிலையத்தில் குஜராத் மாநில பயங்கரவாத ஒழிப்புப் பிரிவினர் கைது செய்தனர்.

இதேவேளை, குஜராத் மாநில பயங்கரவாத ஒழிப்புப் பிரிவினர் மேலதிக விசாரணைகளுக்காக இலங்கைக்கு வருகை தரவுள்ளனர் என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.



# யாழ்ப்பாண நூலகத்தின் கதை ஆவணப்படத்தின் திரையிடல்

'எரியும் நினைவுகள்' யாழ்பாண நூலகத்தின் கதை என்னும் ஆவணப்படத்தின் திரையிடலும் கலந்துரையாடலும் நேற்று யாழ்ப்பாணத்தில் இடம் பெற்றது.

ஆவணப்பட இயக்குனர் எஸ். சோமிதரன் இந்நிகழ்வுக்குத் தலைமை வகித்தார்.

திரையிடல் நிகழ்வும் கலந்துரையாடலும் நேற்று மாலை யாழ்ப்பாணம் பொதுசன நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

ஆவணப்பட இயக்குனர் எஸ் சோமிதரன், சிவகுரு ஆதீன குருமுதல்வர் வேலன் சுவாமிகள், நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன், 'குரல் அற்றவர்களின் குரல்' அமைப்பின் தலைவர் கோமகன், சிவில் சமூகத்தினர் எனப் பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர்.

ஆவணப்படத் திரையிடலுடன் ஆரம்பமான இந்நிகழ்வில் ஆவணப்படம் சார்ந்த கலந்துரையாடலும் இடம் பெற்றது.

இந்த நிகழ்வுக்கு தமிழ் சிவில் சமூக அமையம் அனுசரணை வழங்கியிருந்தது.

# இன்றைய ராசி பலன்கள் - 30.05.2024




இன்றைய நாளை மகிழ்ச்சியுடன் கொண்டாடுவீர்கள். உங்களிடம் வெற்றி பெறவோம் என்ற உறுதி உள்ள காரணத்தால் நீங்கள் வெற்றியை எளிதில் அடைவீர்கள்.

உங்கள் பணிகளை நீங்கள் மகிழ்ச்சியாக செய்வீர்கள். பொதுவான விஷயங்களை பகிர்ந்து கொள்வதன் மூலம் சக பணியாளர்களிடம் ஒத்த உணர்வுகளை அனுபவிக்க இயலும்.

நீங்களும் உங்கள் துணையும் ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொள்வீர்கள். ஆக்க பூர்வமான பேச்சு வார்த்தை காரணமாக உறவில் நல்லிணக்கம் காணப்படும்.

இன்று நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்கும். உங்கள் கையிலிருக்கும் பணம் உங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும்.




உங்கள் திறமைகளை வெளிபடுத்த உகந்த நாள். முக்கிய முடிவுகள் எடுக்க சிறந்த நாள். இன்றைய நாளை சிறப்பாக பயன் படுத்திக்கொள்ளுங்கள்.

நீங்கள் உங்கள் பணிகளை திறமையாக கையாள்வீர்கள். புதிய வாய்ப்புகள் வருவதற்கான வாய்ப்புகள் உள்ளது. உங்கள் முயற்சிக்கு பலன் கிடைக்கும். நீங்கள் சிறப்புடன் பணியாற்றுவீர்கள்.

இன்று உங்கள் துணையுடன் அன்பாக இருப்பீர்கள். உறவில் காணப்படும் நல்ல புரிந்துணர்வே இதற்கு காரணம்.நிதி வளர்ச்சி இன்று சிறப்பாக இருக்கும். உங்கள் சேமிப்பு உயரும். இன்றைய நாளை சிறப்பாக திட்டமிட்டு முன்னேற வேண்டும்.

இன்று நீங்கள் உற்சாகமாகவும் ஆற்றலுடனும் காணப்படுவீர்கள்.




எதிர்மறை எண்ணங்களை விலக்கி நேர்மறை எண்ணங்களை மேற் கொள்ள வேண்டும். நம்பிக்கையுடன் செயல்பட்டால் உங்கள் இலக்குகளில் வெற்றி காணலாம்.

தவறான புரிந்துணர்வு காரணமாக சக பணியாளர்களுடன் தகவல் தொடர்பில் பிரச்சினை காணப்படும். இது உங்கள் பணியின் வளர்ச்சியை பாதிக்கும்.

தவறான புரிந்துணர்வு மற்றும் அபிப்ராயம் காரணமாக உங்கள் துணையுடன் அமைதியின்மை காணப்படும்.

நீங்கள் சம்பாதிக்கும் பணத்தை குடுபத்துக்குச் செலவு செய்வீர்கள்.




இன்று தவறுகள் செய்ய வாய்ப்புள் ளதால் புத்திசாலித்தனத்துடன் உங்கள் செயல்களை மேற்கொள்ளவேண்டும். பொறுமையும் உறுதியும் இன்று குறைந்து காணப்படும். இந்தப் பண்பு களை நீங்கள் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

பணியிடச் சூழல் சிறப்பாக இருக்கும்.நீங்கள் பணியில் தவறுகள் செய்வீர்கள். இதனால் மேலதிகாரிகளின் அதிருப்திக்கு ஆளாவீர்கள்.

இன்று நீங்கள் அமைதியாக இருக்க வேண்டும். கடுமையான செயல்கள் மற்றும் உணர்ச்சி வசப்படுவதன் மூலம் உறவில் நல்லிணக்கம் பராமரிக்க இயலாது.அதிகரிக்கும் செலவுகள் கவலை அளிக்கும். நீங்கள் பணத்தை சிறந்த முறையில் செலவிட வேண்டும்.




தொலை தூர நண்பர்கள் மற்றும் கூட்டாளிகளின் ஆதரவைப் பெறுவீர்கள். அதிக பயணங்கள் மேற்கொள்வீர்கள்.

சக பணியாளர்களின் ஆதரவைப் பெறுவீர்கள். பணியில் உங்கள் முயற்சிக்கு நற்பெயர் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் இனிமையான வார்த்தைகளை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் உங்கள் துணையின் அன்பைப் பெறுவீர்கள்.

இன்று அதிக பண வரவு காணப்படும். உங்கள் சேமிப்பு உயரும். நீங்கள் பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.

இன்று ஆரோக்கியமாக இருப்பீர்கள். ஆரோக்கியத்தில் எந்தக் குறைபாடும் இருக்காது.




இன்று நிறைய வாய்ப்புகள் கிடைக் கும். இந்த வாய்ப்பை நன்கு பயன்படுத்தி நற்பலன் காணுங்கள்.

நீங்கள் பொறுப்புடனும் அர்ப்பணிப்புட னும் பணியாற்றுவீர்கள். உங்கள் புரிந்துணர்வு சக்தி மூலம் நீங்கள் கடினமான பணிகளையும் எளிதாக செய்து முடிப்பீர்கள்.

உங்கள் துணையிடம் மகிழ்ச்சியாகவும் திருப்தியாகவும் இருப்பீர்கள். உங்கள் சமயோஜித புத்தியும் நேர்மறை எண்ணங்களும் இந்தச் சூழ் நிலையை உருவாக்கித் தரும்.

நிதி வளர்ச்சி சீராக இருக்கும். நீங்கள் இன்று உங்கள் குடும்ப நலனுக்காக செலவு செய்வீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்களிடம் இருக்கும் மன உறுதி காரணமாக நல்ல ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள்.




உங்கள் தினசரி செயல்களை மேற்கொள்வதில் சற்று எச்சரிக்கை தேவை. உங்கள் வெற்றிப் பாதையின் குறுக்கே பதற்றமும் ஏமாற்றமும் காணப்படும்.

பணிகளை குறித்தநேரத்தில் முடிப் பது கடினமாக உணர்வீர்கள். உங்கள் பணிகளை மேற்கொள்வதில் தாமதம் காணப்படும்.

குறைவான புரிந்துணர்வு காரணமாக இன்று உங்கள் துணையுடன் சூடான வாக்குவாதம் ஏற்பட வாய்ப்புள்ளது.

இன்று நீங்கள் உங்கள் குடும்பத்திற்கு செலவு செய்வீர்கள். அது வீண் செலவாக இருக்கும். திட்டமிட்டு கட்டுப்பாட்டுடன் செலவு செய்வது உதவிகரமாக இருக்கும்.




இன்று அதிக கவலையுடன் காணப் படுவீர்கள். உற்சாகமாக இருக்க முய லுங்கள். எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

உங்கள் பணிகளை முடிப்பதற்கு கூடுதல் கவனம் தேவை. அதிக பணிகள் காரணமாக பணியில் தவறுகள் நேர வாய்ப்புள்ளது. திட்டமிட்டு பணியாற்ற வேண்டும்.

இன்று நீங்கள் சகஜமான உறுதியான அணுகுமுறை மேற்கொள்வது நல்லது. இதனால் நல்லுறவை அனுபவிக்க இயலும்.

இன்று பண இழப்புக்கான வாய்ப்பு உள்ளது. தேவையற்ற செலவுகள் ஏற்படும். எனவே கவனமாக இருக்க வேண்டும்.

இன்று ஆரோக்கியமாக இருக்க யோகா அல்லது உடற்பயிற்சி மேற்கொள்ளுங்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 30-05.2024

## தனுசு

சுய முயற்சி மூலம் நீங்கள் உங்கள் இலக்குகளை அடையலாம். எந்த செயலையும் நம்பிக்கையுடன் செய் யுங்கள்.

பணியிடத்தில் உங்கள் மேலதி காரிகளின் நம்பிக்கையைப் பெறுவீர்கள். கடின உழைப்புக்கான பாராட்டு கிடைக்கும்.

உறவில் நல்லிணக்கம் காணப்படும். இது மேலும் வளரும். உங்கள் துணை சம்பந்தமான இன்றைய நிகழ்வுகள் உங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும்.

இன்று பணப்புழக்கம் சிறப்பாக இருக்கும். சேமிப்பதற்கான வாய்ப்பு அதிகம் காணப்படுகின்றது.

இன்று ஆரோக்கியத்தில் பெரிய பிரச்சினை ஏதும் இருக்காது. நீங்கள் துடிப்புடனும் உற்சாகமாகவும் இருப்பீர்கள்.

## மகரம்

இன்று கடினமான சவால்களை சந்திக்க நேரலாம். ஆன்மீக ஈடுபாடு ஆறுதலை அளிக்கும்.

பணிகள் அதிகமாக காணப்படும். சில சவாலான சூழ்நிலைகளை சந்திக்க நேரும். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.

உங்கள் துணையுடன் அமைதியின்மை யை உணர்வீர்கள். நீங்கள் உங்கள் துணையுடன் வெளிப்படையான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

உங்கள் கையில் அதிக பணம் காணப்படாது. மேலும் மருத்துவ செலவுகளை நீங்கள் மேற்கொள்ள நேரும்.

இன்று தோல் எரிச்சல் ஏற்பட வாய்ப்புள்ளது.

## கும்பம்

இன்றைய முக்கியமான விஷ யங்களை வேறு நாளைக்கு தள்ளிப் போடுங்கள். சுய முயற்சியில் நீங்கள் மனப் போராட்டங்களை சந்திப்பீர்கள்.

நீங்கள் இன்று உங்கள் பணியில் தவறுகள் செய்ய வாய்ப்புள்ளது. எனவே உங்கள் மேலதிகாரிகளின் கோபத்திற்கு ஆளாக நேரலாம்.

உங்கள் துணையுடன் சுமூகமான உறவு காணப்படாது. குடும்பப் பிரச்சினை காரணமாக தேவையற்ற மோதல்கள் ஏற்படும்.

நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்காது. இன்று ஏற்ற இறக்கங்கள் காணப்படும். இன்று நீங்கள் கவனமாக இருக்க வேண்டியது அவசியம்.நீங்கள் தோல் சம்பந்தப்பட்ட பிரச்சினையால் பாதிக்கப்படலாம். வறுத்த கார உணவு வகைகளை உட்கொள்வதை தவிர்க்கவும்.

## மீனம்

இன்று உங்களுக்கு சாதகமான நாள் அல்ல. இன்று கவலையுடன் காணப்படுவீர்கள். எனவே கவனமாக இருக்க வேண்டும். இந்த விஷ யத்தையும் லேசாக எடுத்துக்கொள்ள வேண்டும்.

இன்று பணிகளைக் கையாள்வது அவ்வளவு எளிதாக இருக்காது. இன்று சுமூகமான நாளாக இருக்க நீங்கள் சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க நேரும். உங்கள் பணிகளை கவனமுடனும் நம்பிக்கையுடனும் மேற்கொள்ளுங்கள்.

உங்கள் துணையுடன் நல்லுறவு பராமரிக்க இயலாது. இன்று உங்கள் நண்பர்களின் தவறான ஆலோசனை கேட்டு நடப்பீர்கள்.

நிதிநிலைமை சிறப்பாக இருக்காது. சேமிப்பதற்கான வாய்ப்பு குறைவு. இது உங்களுக்கு கவலை அளிக்கும்.





